கலைமகள் வெளியீடு—எ.

உ

கணபதி துணை

# தமிழ்நெறி விளக்கம்

## பொருளியல்

(பழைய உரையுடன்)

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்.

தாது ௵ பங்குனி ௴

1937

*All Rights Reserved*]

[விலை எட்டு அணா

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | v—xii |
| 2. | தமிழ்நெறி விளக்கம்-பொருளியல் | 1—54 |
| | பொருளின்வகை | 1 |
| | அகப்பொருள் | 1 |
| | ஐந்திணையின் இடம் | 2 |
| | ஐந்திணையின் பெரும்பொழுது | 2 |
| | சிறுபொழுது | 2 |
| | கருப்பொருள் | 3 |
| | தெய்வம் | 3 |
| | மக்கள் | 4 |
| | செயல் | 4 |
| | உணவு | 5 |
| | இசை | 5 |
| | மரம்முதலியன | 6 |
| | உரிப்பொருள் | 6 |
| | களவு | 7 |
| | க. இயற்கைப் புணர்ச்சி | 10 |
| | உ. பாங்கற்கூட்டம் | 12 |
| | ரு. தோழியிற் கூட்டம் - பகற்குறி | 15 |
| | ச. தோழியிற் கூட்டம் - இரவுக்குறி | 24 |
| | ரு. வரைவுகடாதல் | 31 |
| | சு. உடன் போக்கு வலித்தல் | 34 |
| | கற்பு | 36 |
| | க. அறத்தொடுநிலை | 36 |
| | உ. உடன் செலவு | 42 |
| | ரு. சேயிடைப்பிரிவு | 47 |
| | ச. ஆயிடைப் பிரிவு | 52 |
| 3. | சூத்திர முதற்குறிப்பகராதி | 55 |
| 4. | மேற்கோட் செய்யுண் முதற்குறிப்பகராதி | 55 |
| 5. | பிழையும் திருத்தமும் | 58 |

# முகவுரை

தமிழ்நெறிவிளக்கமென்பது, தமிழினது ஒழுகலாற்றை விளக்கும் விளக்குப்போன்ற நூலென்னும் பொருளுடையது. இஃது அகப்பொருள்விளக்கம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கமென்னும் இலக்கணநூற்பெயர்களையும், உண்மை விளக்கம், நீதிநெறிவிளக்கமென்னும் இலக்கியநூற்பெயர்களையும் போன்றது. தமிழென்றது பலபகுதியாகிய தமிழ்நூற்பரப்பை. நெறியென்றது புலனெறிவழக்கினை. அலங்காரத்தில் நெறியென்பது செய்யுளின் நடையைக் குறித்து நிற்றல் காண்க. இலக்கியங்கண்டதற்கு இலக்கணம் இயம்புவது மரபாதலின் நல்லிசைப்புலவரும் பிறரும் இலக்கியங்களில் அமைத்துக் காட்டியவற்றையும், இலக்கணங்களில் விதித்துக் காட்டியவற்றையும் ஆராய்ந்து அவர்களுடைய தமிழ்நூல்களின் நெறி இத்தகையதென்பதை விளக்குவது இந்நூல்.

இறையனாரகப்பொருளுரையாசிரியர் அந்நூல் நுதலியது இன்னதெனக் கூறுமிடத்து,

'இந்நூல் என்னுதலிற்றோ வெனின் தமிழ்நுதலிய தென்பது'

என்றும், பிறிதோரிடத்தில்,

'தமிழ்தான் நான்குவகைப்படும், எழுத்தும் சொல்லும்
பொருளும் யாப்புமென'

என்றும் அமைக்கின்றார். இவ்விடங்களில் தமிழென்பதற்கு அவர் தமிழிலக்கணமென்ற பொருள் கொண்டாரென்று தோற்றுதலின், தமிழ் இலக்கண நெறியை விளக்குவதென்னும் பொருளும் இந்நூற்பெயருக்குப் பொருத்தமுடையதாகும்.

*''தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே''

என்னும் அவிநயச் சூத்திரமும்,

''தமிழ்நெறி வழக்க மன்ன தனிச்சிலை வழக்கு'' (களங்காண். 61)

என்னும் கம்பர் வாக்கும் தமிழ் இலக்கணவழக்கைச் சிறப்பிக்கின்

* யா. வி. சூ, 96, மேற்.

றன. 'தமிழியல் வழக்கம்', 'தமிழ்நெறி வழக்கம்' என்ற தொடர் மொழிகளுக்குக்கும் இந்நூற்பெயருக்கும் பொருளொப்புமை யிருத்தல் காண்க.

இந்நூல் தமிழிலக்கணப்பகுதி யனைத்தையும் உடையதாகத் தோற்றுகின்றது. இதன் முதற்சூத்திர உரையில்,

'நிறுத்த முறையானே பொருளிலக்கணம் ஆமாறு
உணர்த்துதல் நுதலிற்று'

என்று காணப்படும் வாக்கியமும், தமிழ் நெறிவிளக்கம் பொருளிய லென்ற அதிகாரப் பெயரும் இதற்கு முன் எழுத்தியலும் மொழியியலுமாகிய இரண்டு பிரிவுகள் உண்டென்பதைப் புலப் படுத்துகின்றன. பொருளியலிற்குப் பின்பு யாப்பியலொன்றும் இருந்ததென்று கருத இடமுண்டு.

இப்பொருளியலும் அகம், புறம், அகப்புறமென்னும் மூன்று பிரிவாக இருத்தல் வேண்டும்; இக்கருத்தை முதற் சூத்திரம் தோற்றச் செய்கின்றது. பொருளியலென்ற பொதுப்பெயரே இதன்கண் அகப்பொருள், புறப்பொருளென்னும் இரண்டுபகுதி யேனும் இருக்கவேண்டுமென்று நினைக்க ஆதாரமாகின்றது. இப் பொழுது இந்நூலிற் கிடைப்பவை அகப்பொருளைப்பற்றிக் கூறும் பகுதியாகிய 25 சூத்திரங்களே. அவற்றுள்ளும், 25-ஆவது சூத்திர உரையின் பிற்பகுதி கிடைக்கவில்லை. இவ்விருபத்தைந்து சூத்திரங்களில் இந்நூலாசிரியர் வகுத்துக் கொண்ட அகப்பொரு ளிலக்கணம் முடிவுறுகின்றது.

தமிழிலக்கணங்களில் தொல்காப்பியம், அவிநயம், வீர சோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கமென்பன எழுத்து முதலிய இலக்கணப் பகுதிகளனைத்தையும் பற்றிக் கூறுவன. அவற்றின் வரிசையிலே ஒன்றாக இந்நூலும் சேர்த்து எண்ணத் தகுவது. இந்நூலை இயற்றிய ஆசிரியரின் பெயரும் வரலாறும் அறியக்கூடவில்லை.

தமிழிலக்கணத்தின் ஒவ்வொரு பகுதியும் நாளடைவில் விரிவ டையவே ஒவ்வொரு பகுதியிலும் பலநூல்கள் உண்டாயின. இப் பொழுது அறியப்படும் இலக்கணநூல்களுள் மிகப் பழையதாகிய அகத்தியம் முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்தது. அவற்றில் ஒன்றாகிய இயற்றமிழுக்குத் தொல்காப்பியம் முதலியன இலக்க ணம் வகுத்தன. தொல்காப்பியத்திலுள்ள எழுத்து, சொல் என்னும் இரண்டையும் தனியே விரித்துக் கூறும் நூல்கள் சில பிற்காலத்தில் உண்டாயின. பொருளதிகாரத்திற் கண்ட இலக்க ணங்கள் அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, அணி, பாட்டிய

லெனத் தனித்தனியாக விரிந்து பலநூல்களிற் சொல்லப்பட்டன. யாப்பிலக்கண நூல்கள் எவ்வளவோ இருந்தன வென்பதை யாப் பருங்கலவிருத்தியுரையால் உணரலாம். அகப்பொருளிலக்கண நூல்களும் பல இருந்தன. இப்பொழுது இறையனாரகப்பொருள், நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், களவியற் காரிகை யென்னும் புனைபெயரையுடைய தொருநூல், மாறனகப் பொருளென்பன நமக்குக் கிடைப்பவை. தொல்காப்பிய உரை கள், இறையனாரகப்பொருளுரை, யாப்பருங்கலவிருத்தியுரை, வீரசோழிய உரை முதலியவற்றில் மேற்கோளாக எடுத்தாளப் படும் சில சூத்திரங்களும் வெண்பாக்களும் வேறுபல அகப்பொரு ளிலக்கண நூல்களின் பகுதிகளென்றே நினைக்கத்தகும்.

திருச்சிற்றம்பலக் கோவையாருரையில், பேராசிரியர் அந் நூலுக்கேற்பக் காட்டும் சூத்திரங்கள் ஓர் அகப்பொருளிலக்கண நூலிலுள்ளனவோ, அன்றி அவராக அமைத்துக்கொண்ட உரைச் சூத்திரங்களோ இன்னவென்று துணிய முடியவில்லை.

இங்ஙனம் அமைந்த நூல்கள் ஒன்றற் கொன்று பலவகை வேறுபாடுகள் உடையனவாக இருக்கும். இத்தமிழ்நெறி விளக் கத்தின் அகப்பொருட்பகுதிக்கும் வேறு அகப்பொருளிலக்கண நூல்களுக்கும் வேறுபாடுகள் பல உண்டு. இந்நூல் களவுக்கு முன் கைக்கிளையைக் கூறவில்லை. களவின் பகுதியாகப் பெரும்பாலோ ரால் அமைக்கப்படும் அறத்தொடு நிலை, உடன்போக்கு என்னும் இரண்டையும் இந்நூல் கற்பினுள் அமைக்கின்றது. தொல்காப் பியத்தில் கூற்றிற்குரியவருள் ஒருவராகச் சொல்லப்படாத, தலை வனுடைய நற்றாயின் கூற்றொன்று இதிற் காணப்படுகிறது. அங்கங்கே அருகிக் காணப்படும் சில துறைகளுக்கு இதில் இலக் கணமும் இலக்கியமும் உள்ளன (மேற். 41, 96, 108.)

இந்நூலாசிரியர் பொருளியலை அகம், புறம், அகப்புறமென மூன்றாகப் பகுத்துக் கூறி, பின் அகப்பொருளின் வகையாகிய முதல் கரு உரியென்னும் மூன்றை உணர்த்துகின்றார். கருப் பொருளின் வகையாகச் சூத்திரத்திற் கூறப்படுவன தெய்வம், மானிடம், தொழில், உணவு, இசை, விலங்கு என்பன. ஏனையவை 'பிறவும்' என்பதனாற் கொள்ளக்கிடக்கின்றன. தெய்வக் கருப்பொருள் கூறும்பொழுது பாலைக்கு இரவியை அமைக் கின்றார்;

'ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனிற் றோன்றிய
மழையினையும் காற்றினையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுப'
(தொல். அகத். 5, ந.)

என நச்சினார்க்கினியர் சுட்டும் ஆசிரியருள் இவரும் ஒருவரென்றே கொள்ளத்தகும். இறையனாரகப்பொருள் உரையாசிரியரும், தக்கயாகப்பரணியுரை யாசிரியரும் இத்தகைய ஒருசாரார் கொள்கையை எடுத்துக் கூறுவர்.

களவைப்பற்றிக் கூறப்புகுந்த ஆசிரியர் அது கந்தருவ மணத்தோடொப்பதென்பர். இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டத்துப் பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாதல், உடன்போக்கு வலித்தலென்னும் *ஆறுபிரிவாகக் களவொழுக்கம் பகுக்கப்படுகின்றது. அவற்றுள் இயற்கைப் புணர்ச்சி தன்னயமுணர்த்தல்முதல் ஆற்றினன் பெயர்தலீறுகிய ஏழு துறைகளையும், பாங்கற்கூட்டம் வினுதல் முதல் பழவரை விடுத்தலீறுகிய பன்னிரண்டு துறைகளையும், பகற்குறி பாங்குணர்வு முதல் பாங்கி கொண்டிகத்தலீறுகிய முப்பத்திரண்டு துறைகளையும், இரவுக்குறி காதன்மிகவின் வாய்விடுகிளவி முதல் நோதலீறுகிய பதினைந்து துறைகளையும், வரைவுகடாதல் வருநெறி நினைதல் முதல் அறிந்தேனென்றலீறுகிய எட்டும் பிறவுமாகிய துறைகளையும், உடன்போக்கு வலித்தல் அலர் பெரிதென்றல் முதல் விரும்பினன் நேர்ந்த பாவக்கிளவி யீறுகிய ஏழு துறைகளையும் உடையன.

கற்பொழுக்கம் அறத்தொடுநிலை, உடன் செலவு, சேயிடைப் பிரிவு, ஆயிடைப் பிரிவென்னும் நான்கு பிரிவுகளை உடையது. அவற்றுள் அறத்தொடுநிலை தலைவி தோழிக்கு அறத்தொடுநிற்றல் முதல் இளையோற் கெதிர்தலீறுகிய பதினேழு துறைகளையும், உடன்செலவு கையடை முதல் தலைமகன் மொழியீறுகிய பதினைந்தும் பிறவுமாகிய துறைகளையும், சேயிடைப் பிரிவு பிரிவகையுணர்த்தல் முதல் வருவோன் கூற்றீறுகிய பதினான்கு துறைகளையும், ஆயிடைப் பிரிவு வாயின்மறுத்தல் முதல் செவிலிகூற்றீறுகிய எட்டும் பிறவுமாகிய துறைகளையும் உடையன.

இத்துறைகளிற் சில, உரையில் இரண்டு முதற் பல துறைகளாக விரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறைக்கும் காட்டப்பட்டுள்ள உதாரணங்களுள் குறுந்தொகை, ஐங்குறுநூறு, சிற்றட்டகம் என்னும் நூல்களிலுள்ள செய்யுட்களும் வேறு பல செய்யுட்களும் காணப்படுகின்றன.

---

* களவியற்காரிகை யாசிரியரும் இந்நூலைப் பின்பற்றிக் களவை ஆறுகப் பிரித்தார்; "தெய்வப் புணர்ச்சி[யும் பாங்கனிற் கூட்டஞ்] செவிலிதருந், தையற் புணர்ச்சி பகற்குறி தானு மிரவினிற்சார்ந், துய்தற் குறியும் வரைவுகடாவுடன் போக்குணர்வு,......[களவொ]ழுக் காமென்பரே" (22)

இந்நூலையும் உரையையும் பார்க்கையில் இரண்டும் ஓராசிரியராலேயே இயற்றப்பட்டன வென்று தோற்றுகின்றது. களவியற் காரிகையுரை யாசிரியர்,

> 'தமிழ்நெறி விளக்கத்திற் பொருளியலுடையாரும் களவொழுக்கம் ஆறுவகைப் படுமென்றார். அவை யறிவித்தலைக் கருதிற்று........ தெய்வப் புணர்ச்சியும் பாங்கற்கூட்டமும் தோழியாலாய கூட்டத்துப் பகற்குறியும் இரவுக்குறியும் வரைவுகடாதலும் உடன்போக்கு வலித்தலுமென.............'

என்று இந்நூலை மேற்கோள் காட்டுகின்றனர். இங்ஙனமே "முக்கட்கூட்டம்" (உக) என்ற சூத்திரத்தின் மூலமும் உரையும் இதிலுள்ளபடியே மேற்கோளாக அவராற் காட்டப்பட்டுள்ளன. குறள், கற்பியல், அவதாரிகையில் பரிமேலழகர்,

> 'வரைந்தெய்திய பின் தலைமகன் அறம் பொருளின்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்'

என்றெழுதும் பகுதியில் சேயிடைப் பிரிவு, ஆயிடைப் பிரிவு என இந்நூலுட் குறிக்கப்பெறுவன காணப்படுகின்றன. இவற்றால் இவ்விரண்டு உரையாசிரியர்களுக்கும் முற்பட்ட காலத்தினர் இந்நூலாசிரியரென்று கொள்ளலாகும்.

இலக்கண நூல்களில் தொல்லாசிரியர் கருத்துக்களைத் தாம் மேற்கொண்டதைப் புலப்படுத்தும்பொருட்டு அந்நூல்களின் ஆசிரியர்கள், 'என்ப', 'என்மனார்' என்பன போன்ற சொற்களை அமைப்பது மரபு. என்மனாரென்பதைச் சூத்திரத்தின் இறுதியில் அமைக்கும் வழக்கம் இந்நூலிலன்றிப் பிறநூல்களிற் காணப்படவில்லை (சூ. 13, 19, 22.) குறிஞ்சியைக் குறுஞ்சி யென்றும் (சூ. 3), மகிணனை மகுணனென்றும் (சூ. 8) இந்நூல் குறிக்கின்றது. குரிசில் குருசிலென்றும், பரிதி பருதி யென்றும் வழங்குதல் இங்கே நினைத்தற்குரியது.

கற்பொழுக்கத்தைப் பற்றிக் கூறும் சூத்திரத்திலுள்ள "முக்கட் கூட்டம்" என்பது இன்னதென்று இப்பொழுது விளங்கவில்லை; அதன் உரையில், 'முக்கட் கூட்டமுடைய கற்பு' என்ற பகுதி காணப்படுகின்றது.

> "....கூட்டக் கூடல்
> எவ்விடத் தானுங் களவிற் கில்லை" (இறை. 4)

என்ற சூத்திரமும்,

'அல்லதூஉம், பிறரும் மக்கட் கூட்டம் களவிற்கில்லை யென்றமை யான் மக்கட்கூட்டம் கற்பிற்குண்டென்பது பெறப்பட்டதென்று விரித்துரைத்தாராகலானு மென்க' (யா. வி. 22, உரை)

என்பதும் அப்பகுதி மக்கட்கூட்டம் என்று இருத்தல் கூடு மென்று ஊகிக்கச் செய்கின்றன. ஆயினும், இச் சூத்திரத்தையும் உரையையும் அப்படியே எடுத்து மேற்கோள் காட்டும் களவியற் காரிகையுரையில் முக்கட்கூட்டமென்ற தொடரே இருக்கின்றது. சூத்திரத்தை மட்டும் நோக்குகையில் முக்கட்கூட்டமென்பதற்கு அறத்தொடுநிலையென்னும் பொருள் கொள்ளக் கிடக்கின்றது. அங்ஙனமாயின் யாப்பருங்கலவிருத்தியாசிரியர் காட்டும் மேற் கோளில் முக்கட்கூட்டமென்பதே ஏற்ற பாடமாதல் வேண்டும். இந்த ஐயமும் வேறு பிறவும் நாளடைவில் தெளிவாகுமென்று எண்ணுகிறேன்.

இந்நூலுரையிலுள்ள உதாரணச் செய்யுட்களில் இடம் விளங்காத 172 செய்யுட்களுக்குத் தனியெண்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றிற் பல செய்யுட்கள் *களவியற் காரிகையுரை யில் 'பொருளியல்' என்னும் பெயருடன் காட்டப்பட்டுள்ளன. அவ்வுரையாசிரியர் இந்நூற் சூத்திரத்தையும், உரையையும், மேற் கோளையும் பொருளிய லென்றே குறித்தலை நோக்கும்பொழுது இம் மூன்றையும் ஒருவரே இயற்றியிருத்தல் கூடுமென்ற கருத்து உண்டாகின்றது. உதாரணச் செய்யுளிற் சில தொல் காப்பிய உரை, நம்பியகப்பொருளுரை, யாப்பருங்கலவிருத்தியுரை முதலியவற்றில் வந்துள்ளன. பல உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பெறும் "பூத்தவேங்கை" என்னும் செய்யுளும், "ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்பதும் இதில் உதாரணங்களாக வந்துள்ளன.

இவ்வுதாரணச் செய்யுட்கள் இலக்கண அமைதியைக் காட்டு தற்கெனவே இயற்றப்பட்டன போலச் சில அடிகளால் இயன்றுள் ளன. பல வடிகளால் இயன்ற அகநானூறு முதலிய நூற்செய்யுட் களை இவ்வுரையாசிரியர் உதாரணமாகக் காட்டவில்லை. அகப் பொருள் இலக்கண வமைதியைத் தெரிவிக்கச் சில அடிகளை யுடைய செய்யுட்களே போதியனவென்பது இவர் கருத்துப்

---

* களவியற் காரிகையுரையில், பொருளியலென்னும் பெயரோடு காணப் படும், "நிலவென", "பேதை வாழிய" "நல்லோண் மெல்லடி" என்னும் முதற்குறிப்பையுடைய செய்யுட்கள் இதிற் காணப்படவில்லை.

இந்நூன் மேற்கோட்செய்யுட்களில் 51, 53, 99, 112-ஆம் எண்ணுள்ள வைகளும் ஷை நூலில் மேற்கோளாக வந்துள்ளன.

போலும். சங்கமருவிய நூல்களிலுள்ள சொல்லும் பொருளும் உதாரணச் செய்யுட்களிற் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

இச்செய்யுட்களில் **வழுத்தூ** ரென்பதோர் ஊரின் பெயரும், அதிலிருந்த மதிதர ரென்பவர் சிறப்பும் காணப்படுகின்றன:

"உடையை வாழி நெஞ்சே யிடைகொண்
டழுங்க லோம்புமதி தழங்கொலி மிகுநீர்
**வழுத்தூர்** காக்கும் புணையின்
விழுத்துணை சான்ற மிகுபெருங் கிளையே" (6)

"தூய்மை சான்ற தொல்குடித் தோன்றிய
வாய்மை நாவின் **மதிதரன்** போல
உயர்தவ முனிவர் சாரப்
பெயரா நிலையதிப் பிறங்குபெரு மலையே" (32)

"தந்துநீ யளித்த தண்டழை காண்டலும்
வந்தனெ ளெதிர்ந்த மடந்தை நெஞ்சம்
மண்மிசை விளங்கிய **வழுத்தூர் மதிதரன்**
நுண்ணியற் பனுவ னுழைபொரு ளுனித்த
வாய்மொழி யமிர்த மடுத்தவர் மனமென
ஆனிலை பெற்றன்றி யானறிந் திலனே." (52)

வழுத்தூரென்னும் பெயருடைய ஊரொன்று தஞ்சை ஜில்லாவில் ஐயம்பேட்டைக்கு வடக்கே குடமுருட்டியாற்றின் தென்கரையில்உள்ளது. இவ்வழுத்தூர் அதுவேபோலும். 'வழுத்தூர் காக்கும் புணையின்' என்றது வெள்ளம் பெருகிய காலத்தில் அவ்வூரினர் ஓடத்திலேறிக் கரைசேர்ந்தனரென நினைக்க இடந்தருகின்றது. அன்றிப் புணையென்பது பிறருக்குப் பற்றுக்கோடாகிய ஒரு தலைவனைக் குறிப்பாற் சுட்டியதாகக் கொள்ளலும் ஆம்; "கள்வனுங் கடவனும் **புணைவனுந்** தானே" (குறுந். ௩௧அ.) வழுத்தூரில் 'அரண்மனை மேடு' என்றதோரிடம் இருக்கிறதென்பர். அங்கே ஓர் அரண்மனை யிருந்ததென்றும் அவ்வரண்மனையில் ஓரதிகாரியோ சிற்றரசனோ வாழ்ந்திருந்தனனென்றும் கூறுவர்.

வழுத்தூரில் வாழ்ந்திருந்த மதிதரரென்பார் நற்குடியிற்றோன்றியவர்; வாய்மை தவறு மாண்பினர்; தவவொழுக்கினர்; பல நூலாராய்ச்சி யுடையவர்; நல்லுபதேசம் புரிபவர். இவை மேற்கண்ட செய்யுட்களால் அறியப்படுவன. இச்செய்யுட்களை இயற்றிய ஆசிரியருக்கு அவர் ஆசிரியராக இருத்தலுங்கூடும். 'நுண் இயற்பனுவல் நுழைபொருள் நுனித்த' என்பது நுண்ணிய இலக்

கண நூல்களின் அரிய பொருள்களை ஆராய்ந்தவென்று பொருள் பட்டு, அம் மதிதரர், இலக்கண நூல்களிற் சிறந்த ஆராய்ச்சி யுடையவரென்பதைப் புலப்படுத்தும். மதிதரரென்பது சிவபெரு மான் திருநாமங்களில் ஒன்றாதலின் அவரும் அவரைச் சார்ந்து பயின்ற இவ்வுதாரணச் செய்யுட்களை இயற்றியவரும் சிவபக்திச் செல்வர்களென்று கொள்ளலாம்.

இந்நூலின் ஏட்டுப்பிரதியொன்று பல வருஷங்களுக்கு முன், பவானி போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ குமார சாமிப் பிள்ளை யவர்களிடமிருந்து கிடைத்தது. இதன் முற்பகுதி யும் பிற்பகுதியும் கிடைக்குமோவென்று பல இடங்களுக்குச் சென்று தேடியும் கிடைக்கவில்லை; இருக்கும் பகுதியும் பயன் படாமற்போமே யென்றஞ்சி இந்த அளவிலேயே இதனை வெளியிட எண்ணிச் சென்ற ஆவணியில் பதிப்பிக்கத் தொடங்கினேன். “தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்” (பரிபாடல்) என்று நல்லிசைப் புலவரால் தள்ளத் தகாததாகச் சிறப்பிக்கப்பெறும் அகப்பொருட் பகுதியேனும் தமிழ் நாட்டில் அழியாது இருந்தது குறித்துத் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இதனைத் தம் பத்திரிகையில் வெளியிட்ட ‘கலைமகள்’ அதிபர் ம-ள-ள-ஸ்ரீ ரா. நாராயணசாமி ஐயரவர்களுடைய பேரன்பை என்றும் மறவேன்.

இந்நூலை ஆராயும்போதும் பதிப்பிக்கும்போதும் உட னிருந்து உதவிசெய்தவர்கள், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

‘தியாகராஜ விலாசம்’<br>திருவேட்டீசுவரன்பேட்டை<br>13 - 3 - 37

இங்ஙனம்,<br>**வே. சாமிநாதையர்**

உ

கணபதி துணை

# தமிழ்நெறி விளக்கம்

## பொருளியல்

### பொருளின்வகை

1. அகத்ததும் புறத்தது மாயிரு பகுதியின்
மிகுத்தது மாகி விரிந்தது பொருளே.

**எ**ன்பது, நிறுத்தமுறையானே பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. எனவே இவ்வோத்துப் **பொருளியல்** என்பதாயிற்று.

(**இதன் பொருள்.**) அகத்திணுகிய அகப்பொருளும், புறத்திணுகிய புறப்பொருளும், ஆயிருவகையினுமாகிய அகப்புறப்பொருளுமென [1]மூவீற்றதாய்ப் பல் வேறு வகைப்பட்ட துறைகளாற் பரப்புடையது பொருளாமென்றவாறு.

புறச் செய்கை உளதெனினும் மிகுதிவகையால் அகம்பற்றி நிகழ்தலின் இருதலையும் தீரா அன்பிற்ருகிய காமம் அகப்பொருளென்பது. அகநிகழ்ச்சி உளதெனினும் மிகுதிவகையாற் புறச்செய்கையால் நிகழ்தலிற் குற்றப்பாடில்லா மறம் புறப் பொருளென்பது. அகமல்லா இன்பமும் புறமல்லாப் பொருள்செயல் வகையும் அறமும் அதன் பயனுகிய வீடும் இருவகை நிகழ்ச்சியும் நோக்கிக் கோடலின் அகப்புறப் பொருளெனப் பட்டனவென்பது. (க)

### அகப்பொருள்

2. முதல்கரு வணைந்த வுரிப்பொரு ளகமே.

எ - து. சொல்லப்பட்டனவற்றுள் அகப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முதலுங் கருவுஞ் சார்ந்த உரிப்பொருள் அகப்பொருளாமென்றவாறு.

---

1. வீறு - வேறுபாடு.

முதலெனப்பட்டது இடமும் காலமும் என்று உணர்வது. கருவெனப்பட்ட பொருள் [1]செய்கை யொழித்துக் கொள்க. அதுவும் உரியும் பண்பெனப்படும்; இந்நான்கின் கூட்டமும் திணையெனப்படுமென்பது. (உ)

## ஐந்திணையின் இடம்

3. பொருப்பே வெம்பரல் புறவொடு பழனம்
பரப்பமை வாரி குறுஞ்சிமுதற் [2]பாகே.

எ - து. ஐந்திணைக்கும் இடமுதல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மலைச்சாரலும், வெம்பரலத்தமும், சிறுதூறுடைப் புறவும், மலர்களுலிய பழனஞ்சூழ்ந்த வயலும், கடலொடு கழி சார்ந்த பெருமணலெக்கரும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென ஐம்பெருந்திணையின் நிலமுதலென்றவாறு. (ங)

## ஐந்திணையின் பெரும்பொழுது

4. கூதிர் வேனில் கொழுங்கா ரொழிபனி
வேனில் முன்பனி மெய்யுயர் பொழுதே.

எ - து. ஐந்திணைக்கும் காலமுதலுட் பெரும்பொழுது ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஐப்பசியுங் கார்த்திகையுமாகிய கூதிர்க் காலமும், ஆனியும் ஆடியுமாகிய வேனிற்காலமும், ஆவணியும் புரட்டாதியுமாகிய கார்காலமும், மாசியும் பங்குனியுமாகிய பின்பனிக் காலமும், சித்திரையும் வைகாசியுமாகிய இளவேனிற் காலமும், மார்கழியும் தையுமாகிய முன்பனிக்காலமும் முறையானே ஐந்திணைக்கும் [3]உயர் காலமுதலாம் என்றவாறு. (ச)

## சிறுபொழுது

5. இருணிலை யுச்சி மாலை வைகறை
பொருணிலை [4]யந்தி புணர்க்கும் பொழுதே.

எ - து. சிறு காலமுதல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. 9-ஆம் சூத்திரத்தைப் பார்க்க.

2. பாகு - பகுதி; "படுதிரை வையம் பாத்திய பண்பே" என்றார் தொல்காப்பியனாரும்.

3. உயர்காலம் - பெரும்பொழுது.

4. "காலை யந்தியும் மாலை யந்தியும்" (புறநா. ௩௪:8) என்பவாகலின் இங்கே நாட்காலையையும் எற்பாட்டையும் அந்தியென்றார்.

(இ - ள்.) நடுவுபட்ட இருள்யாமமும், கதிர் காயும் உச்சிப்பொழுதும், மாலைப்பொழுதும், புலர்காலையும், அந்தியும், எற்பாடும் முறையானே ஐந்திணைக்குஞ் சிறுகால முதலா மென்ற வாறு. (ரு)

## கருப்பொருள்

6. தெய்வ மானிடஞ் செய்தி யுணவோ
டெய்திய விசைவிலங் கினையன பிறவும்
பொய்தீர் கருவெனப் புகன்றனர் கொளலே.

எ - து. கருப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சொல்லப்பட்ட முதற்பொருட்குரிய தெய்வமும், அவ்வழி வாழும் மக்களும், அவர்கள் தொழில்களும், [1]உண்பார்க்குத் துப்பாகிய உணவும், இசையும், ஆங்கண் வாழும் விலங்குகளும், பிறவும் ஐந்திணைக்குப் பெற்ற கருப்பொருளா மென்றவாறு. (சா)

## தெய்வம்

7. முருகனு [2]மிரவியு மாயனும் [3]வேந்தனும்
வருண னு மாக வகுத்தனர் கொளலே.

எ - து. சொல்லப்பட்ட கருவினுள் அதிதெய்வம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முருகவேளும், பகலோனும், மாயனும், இந்திரனும், வருணனும் முறையானே ஐந்திணைக்கும் அதிதெய்வ மென்ற வாறு. (எ)

---

1. "துப்பார்க்குத் துப்பாய துப்பு" (குறள்.)

2. 'ஞாயிற்றைத் தெய்வ மாக்கி அவனிற் றோன்றிய மழையினையும் காற்றினையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுப' (தொல். அகத். 5, ந.) என்றும், 'தொல்காப்பியர் பாலைக்கு நிலம்வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்; பிறர் பகவதியையும் ஆதித்தனையும் தெய்வ மென்று வேண்டுவர்' (இறை. 1, உரை) என்றும் எழுதியுள்ளவை இதனை நோக்கிப் போலும். 'தெய்வம் ஆசிரியர் புலப்பட எடுத்தோதிற் றிலரேனும் ......... பரிதியஞ் செல்வனும் திகிரியஞ் செல்வியுமெனக் கொள்க' (சிலப். பதி. அடியார்.); 'அந்நிலத்துக்குப் பரமேசுவரியைத் தவிர ஆதித்தனும் தெய்வமென்று சொல்லுவர்' (தக்க. 55, உரை.)

3. வேந்தன் - இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். 5.)

### மக்கள்

8. வெற்பன் குறவர் விடலை யெயினர்
ஒற்கமில் குறும்பொறை நாடன் குடவர்
மருண னுழவர் சேர்ப்பன் பரதவர்
இனையன பிறவு மக்கட் பெயரே.

எ-து. மக்கட்பெயர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) வெற்பன், விடலை, குறும்பொறை நாடன், [1]மருணன், சேர்ப்பன் என்பன தலைமகன் பெயர். குறவர், எயினர், குடவர், உழவர், பரதவ ரென்பன அந்நிலத்து வாழ்வார் பெயர் என்றவாறு.

பிறவுமென்றதனாற் பொருப்பன், மலையன், சிலம்பன், கொடிச்சி, குறத்தி, குறவர், இறவுள ரெனவும்; காளை, விடலை, எயினர், எயிற்றி, மறவ ரெனவும்; அண்ணல், மீளி, இடைச்சியர், ஆய்ச்சியர், கோவலர், இடையர், பொதுவர், ஆய ரெனவும்; ஊரன், கிழத்தி, மனைவி, கடையர், கடைசிய ரெனவும்; கொண்கன், துறைவன், துறைவி, பரத்தி, நுளையர், நுளைச்சிய ரெனவும் வருவனவெல்லாங் கொள்க. (அ)

### செயல்

9. நிறைத்தே னழித்தலு நெறிச்சென் றலைத்தலும்
[2]ஒருக்கின மோம்பலு முழவொடு பயிறலும்
திரைக்கடற் சேறலோ டினையன செயலே.

எ-து. செய்தியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) தேனழித்தலும், ஆறலைத்தலும், நிரைமேய்த்தலும், உழுதலும், கடலூடு புகுதலும் என்றிப் பெற்றியெல்லாம் ஆண்டைச் செய்தியாம் என்றவாறு.

இனையன வென்றதனால் தினையரிதலும், கிழங்கு அகழ்தலும்; ஊரெறிதலும், நிரைகோடலும்; வரகரிதலும், ஏறு கோடலும்; விழவயர்தலும், புனலாடலும்; உப்பாக்குதலும், முத்துக் குளித்தலும் உள்ளிட்டன வெல்லாங் கொள்க. (கூ)

---

1. மதுரைக் கோவையென்னும் நூலில் மதுணன் என்னும் சொல்லாட்சி மிகுதியாகக் காணப்படுகின்றது.

2. ஒருக்கினம் = ஒருக்கு + இனம்—சேர்க்கப்பட்ட மூவினம்; ஆடு, பசு, எருமையென்பன.

## உணவு

10. தினையே [1]தருப்பண முதிரை செந்நெல்
விலைகோ ளினையன மேவிய வுணவே.

எ - து. உணவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தினையும், தருப்பணமும், வரகு முதலியனவும், வயல் விளையுஞ் செந்நெல்லும், உப்பு விலையும் உள்ளிட்டன வெல்லாம் உணவா மென்றவாறு.

இனையன வென்றதனால் வெதிர்நெல்லும், கிழங்கும், [2]தேனெய்யும், அருவி நீரும், சுனைநீரும்; ஆறலைத்தனவும், வறுஞ் சுனை நீரும், [3]உவர் நீரும்; கான்யாற்று நீரும்; வெண்ணெல்லும், கிணற்று நீரும், பொய்கை நீரும்; மணற் கூவல் நீரும் உள்ளிட்டன வெல்லாம் கொள்க. (௧0)

## இசை

11. [4]முருகியங் குறிஞ்சி துடியே பஞ்சுரம்
பெருகிய வேறங் கோட்பறை தாரம்
பல்லிய மருத [5]மழப்பறை செவ்வழி
சொல்லிய பிறவுஞ் சொற்றவற் றிசையே.

எ - து. இசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வெறிப்பறையும், குறிஞ்சிப் பண்ணும்; துடியும், பஞ்சுரப் பண்ணும்; ஏறங் கோட் பறையும், தாரப் பண்ணும்; நெல்லரி கிணையு முதற் பல்லியமும், மருதப் பண்ணும்; நெய்தற் பறையும், செவ்வழிப் பண்ணும் உள்ளிட்டன ஐந்திணைக்கும் இசையா மென்றவாறு.

பிறவுமென்றதனால் தொண்டகப் பறையும், பூசற் பறையும், வேய்ங்குழலும், யாழும், [6]நாவாய்ப் பறையும் உள்ளிட்டன வெல்லாங் கொள்க. (௧௧)

---

1. தருப்பணம் - அவல்; "ஆத்திரைத் தருப்பணம்" (பெருங். உ. 9:251) என்பதனால் யாத்திரைசெல்வாரை வழிபறித்துப் பெறுவதென்று கொள்க.

2. தேனெய் - தேனாகிய நெய்; இருபெயரொட்டு.
3. "கல்லறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்" (அகநா. எ௬: 3.)
4. முருகியம்: "முருகிய நிறுத்து முரணின ருட்க" (முருகு. 243.)
5. அழப் பறை-பிணத்திற்குக் கொட்டும் சாப்பறை; அழன்-பிணம்.
6. இறை. 1, உரை; நம்பி. 24; சீவக. 501.

## மரம் முதலியன

12. வேங்கை காந்தள் சீய மயிலே
பாங்கர் மராமரஞ் செந்நாய் பருந்தே
குருந்தே முல்லை யிரலை புறவே
காஞ்சி கழுநீர் மேதி யன்னம்
கைதை முண்டகங் கராமே கம்புளென்
றெய்திய பிறவு மியம்பிய விலங்கே.

எ - து. விலங்காமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வேங்கை மரமும், பூங்குலைக் காந்தளும், சீயமாவும், மயிற்புள்ளும்; ஓமை மரமும், மராம்பூவுஞ், செந்நாய் மாவும், பருந்துப் புள்ளும்; [1]குருந்த மரமும், கொடிப்பூ முல்லையும், இரலைமாவும், புறவுப்புள்ளும்; காஞ்சி மரமும், பூங்கழுநீரும், எருமை மாவும், அன்னப்புள்ளும்; தாழை மரமும், பூங்கழி முள்ளியும், [2]முதலை மாவும், [3]கம்புட்புள்ளும் பிறவும் ஐந்திணைக் குரிய விலங்காமென்றவாறு.

பிறவு மென்றதனால் அகிலும், சந்தனமும், வேங்கைப் பூவும், சுனைக் குவளைப்பூவும், புலியும், யானையும், கிளியும், வேங்கையும்; குராம்பூவும், பாதிரம்பூவும், முருக்கும்; கொன்றையும், தோன்றிப்பூவும், முயலும், கானங் கோழியும்; மருதும், வஞ்சியும், தாமரைப் பூவும், நீர்நாயும், தாராவும்; புன்னையும், ஞாழலும், நெய்தற்பூவும், அன்னமும், [4]மகன்றிலும் உள்ளிட்டன வெல்லாம் கொள்க. (கஉ)

## உரிப்பொருள்

13. புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலு
மனைவயி னிரங்கலு மவற்றி னிமித்தமும்
களவொடு கற்பெனக் கவைநர் கூறிய
அளவி லுரிப்பொரு ளாகு மென்மனர்.

---

1. "பெருந்தண் முல்லைப் பிள்ளை யோடிக், குருந்தந் தழுவும் கூடலூரே" (திவ். பெரியதிரு. ௫. 2 : 7.)

2. 'மா சுறவும் முதலையும்' (இறை. சூ. 1, உரை); "கெண்டையஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய், முண்ட கத்துறை சேர்ந்த முதலைமா" (சூளா. நாட்டுச். 22.)

3. கம்புள் - சம்பங்கோழி.

4. "நீருறை மகன்றிற் புணர்ச்சி போல" (குறுந். ௫எ : 2); "அலர் ஞெமன் மகன்றில்" (பரி. அ : 44.)

எ - து. உரிப்பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புணர்தலும் புணர்தல்நிமித்தமும், பிரிதலும் பிரிதல்நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் களவுங் கற்புமென அடக்கிக் கூறப்பட்ட அளவில் உரிப்பொருளாமென்றவாறு.

குறுஞ்சிமுதல் ஐவகை நிலத்திற்கும் சிறப்பு நோக்கியவழிப் புணர்தன் முதல் நிரை நிறையாற் கொள்ளப்படும். அவ்வழிச் சிறுபான்மை எனைத்திற்கு முரிய வழக்கொடு பட்டவாறு கொள்க.

## களவு

**14. முந்திய நூலோர் மொழிந்தவெண் மணத்தினும்**
**கந்திருவ முறைமை களவெனப் படுமே.**

எ - து. கைகோள் இரண்டினுள்ளும் களவொழுக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தொன்னூலாசிரியர்களாற் சொல்லப்பட்ட [1]அறநிலை, ஒப்பு, பொருள் கோள், தெய்வம், அரும்பொருள், வலிநிலை, பேய்நிலை, கந்திருவம் எனப்பட்ட மணம் எட்டினுள்ளும் கந்திருவ வழக்கம் போல்வது களவொழுக்கமாமென்றவாறு.

[2]அறநிலையாவது நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலம் அணிந்து கொடுப்பது. இஃது ஒப்பில் கூட்டமாதலிற் பொருந்தாக் காமத்தின்பாற் படும்.

---

1. "அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம், யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே, இராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய, மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுள், துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பிதன், பொருண்மை யென்மனார் புலமை யோரே" (தொல். களவு. 1, இளம்; இறை. சூ. 1, மேற்.)

2. இது பிரமமெனப்படும்; "கயலே ரமருண்கண் கன்னிபூப் பெய்தி, அயல்பே ரணிகலன்கள் சேர்த்தி - இயலின், நிரலொத்த வந்தணற்கு நீரிற் கொடுத்தல், பிரமமண மென்னும் பெயர்த்து" (தொல். களவு. 1, ந.); "ஒப்பாருக் கொப்பா ரொருபூப் பிரிந்தபின், இப்பான் மதிதோன்று வெல்லைக்கண் - அப்பால், தருமமே போல்கென்று தக்கார்க்குச் சேர்த்தல், பிரமமாம் போலும் பெயர்" (யா. வி. 96, மேற்.)

[1]ஒப்பாவது மைத்துனக் கோத்திரத்தாற்கு மாற்ருது கொடுப்பது. இது கற்பின்பாற் படும்.

[2]பொருள்கோளாவது ஆனும் ஆனேறும் பொற் கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்ருேடு நீரிற் கொடுப்பது. இவ்வாறு ஈதற்கண் ஒத்தபிராய முதலாயினவற்று உளவெனின் கற்பின்பாற் படும்; அன்றெனிற் பொருந்தாக் காமத்தின்பாற் படும்.

[3]தெய்வமாவது வேள்வியாசிரியற்கு வேள்வித்தீ முன்னர்க் கொடுப்பது. இதுவும் பொருள் கோளோ டொக்கும்.

[4]அரும்பொருள் நிலையாவது கொல்லேறு தழுவுதல் வில்லேற்று முதலியன செய்தார்க்குக் கொடுப்பது. இது வன்மணமாதலிற் பொருந்தாக் காமத்தின்பாற் படும்.

---

1. *இது பிராசாபத்தியமெனப்படும்; "அரிமத ருண்க ணாயிழை யெய்துதற், குரியவன் கொடுத்த வொண்பொரு ளிரட்டி, திருவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி, அரியதன் கிளேயோ டமைவரக் கொடுத்தல், பிரிதவில்லாப் பிராசா பத்தியம்"* (தொல். களவு, 1, ந.); *"கொடுத்த பொருள் வாங்கிக் கொண்டபேர்........,மடுப்பர் மடுத்தற் கமைந்தால் - அடுப்போன், இரண்டா மடங்குபெய் தீவ ததுவே, இரண்டா மணத்தி னியல்பு"* (யா. வி. 96, மேற்.)

2. *இஃது ஆரிடமெனப்படும்; "தனக்கொத்த வொண்பொரு டன் மகளேச் சேர்த்தி, மனக்கொத்த மாண்புடையாற் பேணி - இனக்கொத்த, ஈரிடத் தாவை நிறீஇயிடை யீவதே, ஆரிடத்தார் கண்டமண மாம்"* (தொல். களவு. 1, ந. மேற்.); *"இற்குலத்தோ டொப்பானுக் கொப்பா னிமிலேருப், பொற்குளம்பிற் பொற்கோட்ட வாப்புனைந்து - முற்படுத்து, வாரிடம்பே ராமுலேயை வாழ்க்கைக்கண் வைப்பதுரை, ஆரிடம் பேரா மதற்கு"* (யா. வி. 96, மேற்.)

3. *"நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த, வேள்வி விளங்கழன் முன்னிறீஇக் - கேள்வியாற், கைவைத்தாம் பூணுளேக் காமுற்ருற் கீவதே,தெய்வ மணத்தார் திறம்"* (தொல். களவு. 1, ந.); *"மெய்ப்பாலேப் பெண்டன்மை யெய்தியபின் மெல்லியலே, ஒப்ப வுணர்ந்த பொழுதுண்டல் - ஒப்பார்கு, நெய்தயங்கு தீமுன்னர் நேரிழையை யீவதே, தெய்வப்பே ராகுந் தெளிந்து"* (யா. வி. 96, மேற்.)

4. *இஃது ஆசுரமெனப்படும்; "முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத், தகைநலங் கருதுந் தருக்கின ருளரெனின், இவையிவை செய்தாற் கெளியண்மற் றிவளெனத், தொகைநிலே யுரைத்த பின்றைப் பகைவலித், தன்னவை யாற்றிய வளவையிற் றயங்கல், தொன்னிலே யசுரந் துணிந்த வாறே"* (தொல். களவு. 1, ந.);*"வில்லேற்றல் வேள்வியைக் காத்தன் மிகுவலிக், கொல்லேற் றியல்குழையைக் கோடலென் - றெல்லாம், அரியனசெய் தெய்தினு ளயி னசுரம், மரியவா மந்த மணம்"* (யா. வி. 96, மேற்.)

[1]வலிநிலையாவது தமரினும் அவளினும் பெறாது வலிந்து கொள்வது. இதுவும் அதன்பாற்படும்.

[2]பேய்நிலையாவது களித்தாள்மாட்டும் துயின்றாள்மாட்டும் செல்வது. இதுவும் பொருந்தாக் காமத்தின்பாற்படும்.

[3]கந்திருவமாவது ஒத்தாரிருவர் தாமே களவினாற் கூடுங் கூட்டம். இதனால் ஒருவாறு அறமுறைகிய ஒப்புமை யுடைத் தேனும் [4]ஆண் முதலாகச் சொல்லப்பட்ட களவொழுக்கம் தெய்வப் புணர்ச்சியும், பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டத் துப் பகற்குறியும், இரவுக்குறியும், வரைவு கடாதலும், உடன் போக்கு வலித்தலுமென [5]ஆறும். எ - று.

---

1. இஃது இராக்கத மெனப்படும்; "மலிபொற்பைம் பூணுளை மாலுற்ற மைந்தர், வலிதிற்கொண் டாள்வதே யென்ப—வலிதிற், பராக்கதஞ் செய்து ழலும் பாழி நிமிர்தோள், இராக்கதத்தார் மன்ற வியல்பு" (தொல். களவு. 1, ந.); "பூந்துகிலோ டின்னவுமே விட்டும் புதவடைத்தும், பாய்ந்து கதந்தாஅய்ப் பற்றிக்கொண் - டேந்திழையை, எய்தப் படுவ திராக்கத மென்பதே, மைதீர்ந்தார் சொல்லு மணம்" (யா. வி. 95, மேற்.)

2. இது பைசாசமெனப்படும்; "எச்சார்க் கெளிய ரியைந்த காவலர், பொச்சாப் பெய்திய பொழுதுகொ ளமையத்து, மெய்ச்சார் பெய்திய மிகு புகழ் நண்பின், உசாவார்க் குதவாக் கேண்மை, பிசாசர் பேணிய பெருமைசா வியல்பே", "இடைமயக்கஞ் செய்யா வியல்பின னீங்கி, உடைமயக்கி யுட்கறுத்த லென்ப - உடைய, துசாவார்க் குதவாத வூனிலா யாக்கைப், பிசாசத்தார் கண்டமணப் பேறு" (தொல். களவு. 1, ந); "துஞ்சல் களித்தன் மயங்குதன் மாழாத்தல், அஞ்ச லறிவழித லாதலென் - றெஞ்சிலவும், இன்ன திறத்தா னிழிதக வெய்துபவேற், பின்னைப் பசாசமணப் பேர்", "குணத்தி னிழிந்த மயங்கி யவரொடும், பிணத்தினும் விலங்கினும் பிணைவது பைசாசம்" (யா. வி. 95, மேற்.)

3. "அதிர்ப்பில்பைம் பூணாரு மாடவருந் தம்முள், எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப - கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக், கந்திருவர் கண்ட கலப்பு" (தொல். களவு. 1, ந.) ; "ஒத்த குலத்தார் தமியரா யோரிடத்துத், தத்தமிற் கண்டதம் மன்பினால் - உய்த்திட, அந்தர மின்றிப் புணர்வ ததுவரோ, கந்தருவ மென்ற கருத்து" (யா. வி. 95, மேற்.)

4. தலைவனே முதலிற்கூற்று நிகழ்த்துவானாதலின் இங்ஙனம் கூறினார்.

5. 'தமிழ்நெறி விளக்கத்திற் பொருளியலுடையாரும் களவொழுக்கம் ஆறுவகைப்படு மென்றார்' (களவியற் காரிகை, 23, உரை.)

2

## க. இயற்கைப் புணர்ச்சி

15. **தன்னயந் தெளிதலுந் தலைப்பிரி வச்சமும்
இன்னியல் வன்பொறை யெய்துத லருமையும்
உயிரெனக் கூறலு மாற்றினன் பெயர்தலும்
செயிர்தபு காதற் றெய்வப் புணர்ச்சி.**

எ - து. சொல்லப்பட்ட பாகினுட் தெய்வப்புணர்ச்சியா மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முற்செய்வினை காரணமாகக் கண்ணுற்றுப் புணர்ந்த பின்பு தலைமகன் நயப்புணர்த்தலும், தெருட்டலும், பிரிவச்சமும், வன்பொறையும், எய்துதலருமையும், உயிரென்றலும் ஆற்றிப்பெயர்தலு மெனப்பட்டன தெய்வப்புணர்ச்சியா மென்றவாறு.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"

(குறுந். உ)

என்பது நயப்புணர்த்தியது.

"யாயு ஞாயு மாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

(குறுந். சo.)

என்பது தெளிதல்.

"இனையல் வாழி பிரிவொன் றிலனே
நனைமலர் நறும்பூங் கோதை
அமையே னின்னையா னகன்ற ஞான்றே" (1)

(களவியற். 25, மேற்.)

என்பது பிரிவச்சம்.

"[1]ஆற்றினன் மன்னோ நெஞ்சே பிரியின்
ஆற்றா ளிவளென வழுங்கின மாக
ஆற்றா நிலைமை கைவிட்
டாற்றா ளாயின ளாயிழை யதற்கே" (2)

என்பது வன்பொறை.

1. இறை. 2, உரை.

"இனையல் வாழி யெம்மூர் மலர்ந்த
பழனத் தாமரைக் கெழீஇய வண்டுநின்
கண்ணென மலர்ந்த காமர் சுனைமலர்
நண்ணி நாளு நலனுக ரும்மே"

(சிற்றட்டகம்.)

இதுவுமது.

"[1]மனவே ரல்குன் மடந்தை கூட்டம்
கனவோ தெரியின் யாவதும்
நனவே யெனினு நண்ணலோ வரிதே"

(களவியற். 25, மேற்.) (3)

என்பது எய்துத லருமை.

"[2]புலனன் றென்ப வின்னுயி ரதுவே
அலர்முலை யாகந் தாங்கி
நிலவொளி *மதியி னிலவுமெ னுயிரே" (4)

(களவியற். 25, மேற்.)

என்பது உயிரெனக் கூறல்.

"கனவே யாயினு நனவே யாயினும்
நல்வினை தந்ததொன் றன்றே யதனல்
மெல்லிய லாகம் மேவவும் பெறுமே" (5)

என்பது தெய்வந் துணையாகக் கொண்டு ஆற்றிப்பெயர்ந்தது.

"உடையை வாழி நெஞ்சே யிடைகொண்
டழுங்க லோம்புமதி தழங்கொலி மிகுநீர்

---

1. நம்பி. 133, மேற்.

2. "காணு மரபிற் றுயிரென மொழிவோர், நாணிலர் மன்ற பொய்ம் மொழிந் தனரே, யாஅங் காண்டுமெம் மரும்பெற லுயிரே, சொல்லு மாடு மென்மென லியலும், கணைக்கா னுணுகிய நுசுப்பின், மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே" (தொல். களவு. 10, ந. மேற்); "தேயத் தவ ருயி ரைப்புல னன்றென்பர் செந்நிலத்தைக், காயக் கனன்றெதிர்ந் தார்மரு மத்துக் கடுங்கணைகள், பாயச் சிலைதொட்ட பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம் பொழிற்கண், ஆயத் திடையிது வோதிரி கின்றதென் னருயிரே", "இன்னு யிர் கண்டறி வாரில்லை யென்ப ரிகன்மலைந்தார், மன்னுயிர் வான்சென் றடையக் கடையலுள் வென்றுவையம், தன்னுயிர் போனின்று தாங்குமெங் கோன் கொல்லித் தாழ்பொழில்வாய், என்னுயி ராயத் திடையிது வோநின் றியங்குவதே" (பாண்டிக் கோவை); "என்னுயிர் யான்கண் டிளமுலையும் வேய்த்தோளும், பொன்னிறமுங் கொண்டு புனமயில்போல் - மன்னி, வயங் குகின்ற நெய்தல்வாய் வ[ானவன்ற]ன் வெற்பில், இயங்குகின்ற தாயத் திடை" (கிளவி விளக்கம்.)

(பி - ம்.) *மதியென நிலவு.

*வழுத்தூர் காக்கும் புணையின்*
*விழுத்துணை சான்ற மிகுபெருங் கிளையே"* (6)

(களவியற். 25, மேற்.)

என்பது பாங்கனை நினைத்து ஆற்றிப் பெயர்ந்தது. (கரு)

## உ. பாங்கற்கூட்டம்

**16. வினுதலும் விடுத்தலுங் கழறலு மறுத்தலும்**
**நோதலும் யாண்டென வின்னுழி யென்றலும்**
**மாதரைக் காண்டலு மன்னிய வகுத்தலும்**
**கிழவோற் கிசைத்தலு மாற்றுன் கிளத்தலும்**
**பழவரை விடுத்தலும் பாங்கற் கூட்டம்.**

எ - து. பாங்கற்கூட்டம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாங்கன் தலைமகற்குற்ற வினுதலும், தலைமகன் இன்னதென்றலும், பாங்கன் கழறலும், தலைமகன் கழற்றெதிர் மறுத்தலும், பாங்கன் நோதலும், எவ்விடத் தெவ்வுருவென்றலும், தலைமகன் இன்ன விடத்து இன்னவுரு வென்றலும், பாங்கன் அவ்வி டத்து அவ்வுருக் காண்டலும், தலைமகனைப் பெருமை கூறலும், பெயர்ந்து வந்து தலைமகற்கு உரைத்தலும் தலைமகன் தலைமகளைக் கண்டு அணைதலும், உறவினுற்றுன் கூறலும், விடுத்தலும் பாங்கற்கூட்டமா மென்ற வாறு.

*"முன்னினை முடிப்பதொன் றுளதுகொன் [1]மூவகை*
*நுண்ணிய பனுவலி னுழைந்துகொல்*
*என்னைகொல் வாடிய தண்ணனின் னெழிலே"* (7)

என்பது வினுதல்.

*"சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை*
*கான யானை யணங்கி யாஅங்*
*கிளையண் முளைவா ளெயிற்றள்*
*வளையுடைக் கையளெம் மணங்கி யோளே"*

(குறுந். கககூ)

என்பது பாங்கற்குத் தலைமகன் கூறியது.

*"[2]பொருந்தா தம்ம புனையிழை யரிவை*
*முருந்தேர் முறுவ லேைக்கின்*
*வருந்தின னென்பது பெருந்தகை பெரிதே"* (8)

(களவியற். 26, மேற்.)

என்பது பாங்கன் கழறியது.

---

1. மூவகைப்பனுவல் - இயல் இசைநாடகமாகிய முத்தமிழ் நூல்கள்.
2. பெருந்தகை பெரிதே வருந்தினனென்பது பொருந்தாதெனக் கூட்டுக.

"[1]காண்குவி ராயிற் கழறலிர் மன்னோ
பூண்புனை வளரிள வனமுலை
மாண்குழை மாதர் மடங்கெழு நோக்கே" (9)

என்பது கழற்றெதிர் மறுத்தது.

"புலந்துறை போகிய நெஞ்சுநிறை யழிந்து
கலங்குவ தாயின் மாதோ
சிலம்பனை யாரோ தெளிக்குநர் பிறரே" (10)

என்பது பாங்கன் பிழைத்தனனென்று ஆற்றாதாயிற்று.

"வாழ்வதி யாவது கொல்லோ வான்புகழ்ச்
சூழ்கழ லண்ண னெஞ்சம்
ஆழ்துய ரெய்த வணங்கிய வணங்கே" (11)
(களவியற். 26, மேற்.)

என்பது பாங்கன் இடம் வினாயிற்று.

"கண்ணே காவியங் கயமலர் நுதலே
தண்ணிள மதியெனத் தகுமே பதியும்
பெருமலைச் சாரற் சீறூர்
அருநிறை வாங்கிய வாயிழை தனக்கே" (12)

என்பது தலைமகள் குறியுரைத்தது.

"வேங்கை யொள்வீ காந்தளொடு கமழும்
பூந்தண் சாரலு மிதுவே யேந்திலை
அயில்வே லண்ணல் கூறிய
மயிலேர் சாயல் வண்ணமு மிதுவே" (13)
(களவியற். 27, மேற்.)

என்பது பாங்கன் எதிர்ப்பட்டது.

"நோதக வுடைத்தே நெஞ்ச மதிமிசை
மாதர்க் குவளை மலர்மலர்ந் தன்ன
கருந்தடங் கண்கண் டாற்றிய
பெருந்தகை யண்ணலைக் கழறினன் பெரிதே" (14)
(களவியற். 27, மேற்.)

என்பது தலைமகன் ஆற்றல் கூறியது.

---

1. "காணிற் கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே" (சிற். 23); "அம்மவாழி" (அகநா. கசூO) என்பதையும், "விண்டார்பட", "விண்டலங்கெஃகொடு", "மண்கொண்டு" (பாண்டிக்கோவை) என்னும் செய்யுட்களையும் பார்க்க.

"ஆய்தளிர் பொதுளிய வீதகை தண்சினைக்
[1]காய்கதிர் நுழையாக் கடிபொழில்
யாவயி னோரும் விழைவுறுந் தகைத்தே" (15)

(களவியற். 28, மேற்.)

என்பது பாங்கன் பெயர்ந்து வந்து தலைமகற் குரைத்தது.

"[2]தனிமை நெஞ்சத்து முனிவுகண் ணகற்றலின்
வினைமாண் பாவை யன்ன
புனையிழை மாதரும் போன்றதிப் பொழிலே" (16)

(களவியற். 28, மேற்.)

என்பது தலைமகன் அவ்விடத்துச் சென்றது.

"[3]தெய்வ மாக வையுறு நெஞ்சம்
பொய்யா தாயினின் செவ்வாய் திறந்து
கிளிபுரை கிளவியாம் பெறுக
ஒளியிழை மடந்தை யுயிர்பெயர்ப் பரிதே" (17)

(களவியற். 28, மேற்.)

என்பது தலைமகள் அணைதலுறவினாற்றான் கூறியது.

---

1. "கதிர்நுழை கல்லா மாம்பயில் கடிமிளை" (புறநா. உக: 5.) "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும்பாண். 374,அடிக்.)

2. "குழைமுகத்தாற் கொங்கை மலையு மருங்கால், விழியரிய நாட்டத் தால் வேனற் - பொழிலெல்லாம், புல்லார்ப் புறங்கண்ட கண்டன் புகாரனைய, நல்லாளே யாகு நமக்கு", "முருக்கின் புதுமலரான் முல்லை நகையால், நெருக்கியெழுஞ் செவ்விள நீராற்-குருக்கொடியால், நான்ற குழைமுகத்தா ளனயந்த நன்னுதலைப், போன்ற துயர்பூம் பொழில்" (களவியற். மேற்.); "தேர்மன்னு தானை பரப்பித்தென் சேவூர்ச் செருமலைந்த, போர்மன்னர் தம்மைப் புறங்கண்டு நாணிய பூங்கழற்கால், ஆர்மன்னு வேலரி கேசரி யந்தண் புகாரனைய, ஏர்மன்னு கோதையைப் போலினி தாயிற்றிவ் வீர்ம் பொழிலே"(பாண்டிக்.); "கரிதாகி மென்குழல் போனிழல் போற்கலந் தால் விடுத்தற், கரிதா யுறவி லறவினி தாயர வல்குலினிற், பெரிதாய் விரும்பின வெல்லா நுகரப் பெறுவதற்கே, உரிதா யளியுடைத் தாயவர் போலு முயர் பொழிலே" (அம்பிகாபதி. 28); "காம்பிணை யாற்களி மாமயி லாற்கதிர் மாமணியால், வாம்பிணை யால்வல்லி யொல்குத லான்மன்னு மம்பலவன், பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமும், தேம்பிணை வார் குழ லாளெனத் தோன்றுமென் சிந்தனைக்கே" (சிற். 38.)

3. "செய்ய மலரிற் றிருமகளே யென்றுன்னை, ஐய முறுகின்றே னல்லையேல் - உய்ய, உரைதந் தருளா யுயிர்வருமோ போனால், விரைதந்த மேனியாய் மீட்டு" (கிளவித்தெளிவு); "மேவியொன் றுரைவெண் மாத்து வென் றுன்கன்னி வீழ்பொழில்வாய்த், தேவியென் றுநின்னை யானினைக் கின்றது சேயரிபாய், காவிவென் றுயகண் ணயல்லை யேலொன்று கட்டுரை

"[1]காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெம்மே" (18)
(களவியற். 28, மேற்.)

இதுவுமது.

"பெருமலர்ப் பிறந்த திருமக ளம்மலர்
அருங்கவி னெய்தச் சென்று சேர்ந்தாங்
கிருங்கலத் தொன்மனை பொலியப்
பெருந்தகைத் தோளி பெயர்ந்தனை சென்மே" (19)

என்பது தலைமகளை விடுத்தல். (கசு)

## ரு. தோழியிற் கூட்டம்—பகற்குறி

17. பாங்குணர் வையுற விரந்துகுறை யுறுதலும்
ஆங்கவன் விஞதலு மதியுட ஞக்கலும்
துணிதலுஞ் சேட்பட நிறுத்தலுஞ் சுட்டிய
தன்றி யென்றிவண் மறையே னென்றலும்
குறியா கூறலும் படைத்தன மொழிதலும்
அறியா ளென்றலு நீகூ றென்றலும்
நகைகொண் டாற்றலு நகாதுரை யென்றலும்
கையுறை *யெளிமை காட்டலு மெய்யுற
ஒவ்வா தென்றலு மவணிலை யுணர்ந்து
கொள்குவ னென்றலு மடன்மா கூறலும்
மற்றது விலக்கலுங் கையுறை கோடலும்
விழைய வுணர்த்தலு நாணொடு நீங்கலும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தலும்

---

யாய், ஆவிசென் ருற்பின்னை யாரோ பெயர்ப்ப ரகலிடத்தே", "திரையுறை வார்புனற் சேவூர்ச் செருமன்னர் சீரழித்த, உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதனெண் பூம்பொதியில், வரையுறை தெய்வமென் றேற்கல்லை யேலுன் றன் வாய்திறவாய், விரையுறை கோதை யுயிர்செலின் யார்பிறர் மீட்பவரே" (பாண்டிக்கோவை); "காவிநின் றேர்தரு கண்டார்வண் டில்லைக்கண் ணார்க மலத், தேவியென் றேயையஞ் சென்றதன் றேயறி யச்சிறிது, மாவியன் றன்னமென் ஞேக்கிநின் வாய்திற வாவிடினென், ஆவியன் றேயமிழ் தேயணங் கேயின் றழிகின்றதே" (சிற். 41.)

1. யா வி. 39, மேற்.

(பி - ம்.) *யொருமை.

தழீஇக் கோடலுந் தழையேற் பித்தலும்
கையுறை யெதிர்ந்தமை மெய்பெற விசைத்த
[லும்
விரும்பிட முரைத்தலுங் குறியொடு நீங்கலும்
புனைந்து நிலைபலு நிலைமை கூறலும்
பாங்கிகொண் டிகத்தலும் பகற்குறி யாகும்.

எ - து. தோழியிற் கூட்டத்துப் பகற்குறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாங்கியை உணர்ந்தது முதலாகக் கொண்டு பெயர்ந்த தீறுகச் சொல்லப் பட்டன வெல்லாம் தோழியினாகிய பகற்குறிக் கூட்டமா மென்றவாறு.

"[1]நோக்கினும் பிறர்முக நோக்காள் சாரினும்
பூக்குழன் மடந்தை தோள்சா ரும்மே
அன்ன தலையளி யுடைமையின்
இன்னுயிர்த் தோழியிவ் வேந்திழை யிவட்கே" (20)

(களவியற். 25, மேற்.)

என்பது பாங்கியை உணர்ந்தது.

"[2]புனையிழை யாயமொடு பூம்பந் தெறியவும்
[3]நனைமலர் ஞாழ லொள்வீ கொய்யவும்
வருந்தினள் கொல்லோ மடந்தை
பரந்தன்று மாதோ பண்புகெழு நிறனே" (21)

(களவியற். 31, மேற்.)

என்பது வேறுபாடுகண்டு பாங்கி ஐயுற்றது.

"[4]கண்ணி தகைசிறந் தனவே தண்ணென்
பூந்தழை செவ்விய போலும் வாங்கிருங்
கூந்தலு மல்குலும் பொலிய
எந்தினிர் கொண்மின்யாம் விழைகுவம் பெரிதே" (22)

(களவியற். 29, மேற்.)

என்பது தலைமகன் இரந்து குறையுற்றது.

---

1. நம்பி. 133, மேற்.

2. "பந்துவழிப் படர்குவ ளாயினு நொந்துநனி, வெம்புமனளியள்" (அகநா. கஙரு: 3 - 4.)

3. "கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்" (அகநா. உகசு: 8.)

4. நம்பி. 144, மேற்.

"வைகல் வைக லைய விவ்வழிக்
கையுறை யேந்தினிர் வருதிர் மற்றஃ
தறிகலம் யாமெமர்க் குரைப்பிற்
பெறுகுவி ரெந்தை பெருவண் மையனே" (23)

என்பது தலைமகனைத் தோழி வினாயிற்று.

"[1]அம்புமுகங் கிழித்த வெம்புண் வாய
கலைமான் போந்தன வுளவோநும்
மடமா னோக்க மரீஇயின படர்ந்தே" (24)
(களவியற். 30, மேற்.)

என்பது கவர்ந்துநின்ற தோழியை மதியுடம்படுப்பானுற்றுத் தோழியும் தலைமகளும் உடனாயவழித் தலைமகன் வினாயது.

"[2]உரைமி னீர்ம னெமக்கே வரையிடை
அரும்படர்க் கவலை நீந்திப்
பெருந்துய ரருப்பம் பெயர்தரு நெறியே" (25)
(களவியற். 30, மேற்.)

என்பது வழிவினாயது.

"[3]கையது செயலையந் தழையே வினாய
தெய்புண் வாய மாவே கைவிட்
டகலா னம்மவிவ் வகன்புனம்
தகையோ னுள்ளிய தறியலம் பெரிதே" (26)
(நம்பி. 140, மேற்; களவியற். 33, மேற்.)

என்பது தலைமகனைத் தோழி ஐயுற்றது.

---

1. "தத்திச் சிலைத்தெழுந்து தார்குருதி மெய்சோர, இத்திக்கி லிந்தப் புனத்திடையே - தித்தித்தேன், போந்தனைய சோர்குழலீர் யானெய்த போதொருமான், போந்ததே யிவ்வழியே புக்கு" (பழம்பாட்டு); "தண்டு புரை கதிர்த் தாழ்குரற் செந்தினை, மண்டுபு கவரு மாண்கிளி மாற்றும், ஒண்டொடிப் பணைத்தோ ளொண்ணுத லிளையீர், கண்டனி ராயிற் கரவா துரைமின், கொண்டன குழுவி னீங்கி மண்டிய, உள்ளழி பகழியொ டெங்கியோர், புள்ளி மான்கலை போகிய நெறியே" (தொல். களவு. 11, ந. மேற்.)

2. "வெல்லுந் திறநினைந் தேற்றார் விழிஞத்து விண்படரக், கொல்லின் மலிந்தசெவ் வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலின்றேன், புல்லும் பொழிலின வேங்கையின் கீழ்நின்ற பூங்குழலீர், செல்லு நெறியறி யேனுரை யீர்நுஞ் சிறுகுடிக்கே" (பாண்டிக்கோவை.)

3. "வில்வேறு பட்ட படியே வினைவேறு, சொல்வேறு பட்டபடி தோற்றுவிக்க - மல்வேறு, போகாத தோளும் பொலிவழிய நம்புனம்விட், டேகாத தென்கொ லிவர்" (கிளவித்தெளிவு); "மழையும் புரைவண்கை வானவன் மாறன்மை தோய்பொதியில், வழையுங் கமழு மணிநெடுங் கோட்டுவண் சந்தனத்தின், தழையும் விழைதகு கண்ணியு மேந்தியித் தண்புனத்

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" (27)
(யா. வி. மேற் ; களவியற். 31, மேற்.)

என்பது தோழி தலைமகனைத் துணிந்தது.

"[1]நண்ணுத லரிதே தண்ணெனன் சாரல்
எண்ணிய குறையொன் றுளதெனின்
நண்ணுது முடித்தி யண்ண லீயே" (28)
(களவியற். 33, மேற்.)

என்பது தலைமகனைச் சேட்பட நிறுத்தது.

"[2]வாங்கிருஞ் சிலம்பின் வண்ட லயரும்
தேங்கமழ் கூந்தன் மகளிருள்
யாங்கா கியதோ வேந்தனின் னருளே" (29)
(நம்பி. 144, மேற்.)

என்பது அறியாள் போன்றது.

---

தின், உழையும் பிரிய லுறுனறி யேனிவ னுள்ளியதே", "திண்பூ முகநெடு வேன்மன்னர் சேவூர்ப் படமுடிமேற், றண்பூ மலர்த்தும்பை சூடிய தார் மன்ன னேரியென்னும், வண்பூஞ் சிலம்பின் வரைப்புன நீங்கான் வருஞ் சுரும்பார், ஒண்பூந் தழையுந் தருமறி யேனிவ னுள்ளியதே"
(பாண்டிக்கோவை.)

1. "புல்லா வயவர் நறையாற் றழியப் பொருதழித்த, வில்லான் விளங்குமுத் தக்குடை மன்னன் வியனிலத்தோர், எல்லா மிறைஞ்சநின் றோன்கொல்லி மல்லலஞ் சாரலிங்கு, நில்லா தியங்குமின் காப்புடைத் தையவிந் நீள்புனமே", "மண்ணிவர் செங்கோல் வரோதயன் வல்லத்து மாற்றலர்க்கு, விண்ணிவர் செல்வம் விளைவித்த வேந்தன்விண் டோய் பொதியிற், கண்ணிவர் பூந்தண் சிலம்பிடை வாரன்மின் காப்புடைத்தாற், பண்ணிவர் வண்டறை சோலை வளாயவெம் பைம்புனமே" (பாண்டிக் கோவை.)

2. "மன்னேர்மன் சாய லவருண் மருடீர, இன்னார்க ணென்ப தறியே னல்-மின்னாரும், கார்கெழு தோன்றற் கணமலை நன்னாட, யார்கண்ண தாகுங் குறை' (தொல். களவு. 23, ந. மேற்.); "பொறிகெழு கெண்டை வடவரை மேல்வைத்திப் பூமியெல்லாம், நெறிகெழு செங்கோ னடாநெடு மாறனெல் வேலிவென்றான், வெறிகமழ் பூங்கன்னிக் கானல் விளையாட் டயர்நின்ற, செறிகுழ லார்பலர் யார்கண்ண தோவண்ணல் சிந்தனையே", "இளையா வெதிர்நின்ற தெம்மன்னர் சேவூர் படச்சிறுகட், டுளையார் கருங்கைக் களிறுந்தி ஞான்றேண்டிச் சூழ்துறைவாய், வளையார் வனமுலை யார்வண்ட லாடும் வரிநெடுங்கண், இளையார் பலருளர் யார்கண்ண தோவண்ண லின்னருளே" (பாண்டிக்கோவை.)

"[1]பயில்பூஞ் சாரனின் பண்புளங் கவர்ந்த
மயிலேர் சாயல் வாணுதல்
உயிரோ ரன்ன வன்பின ளெமக்கே" (30)

என்பது அறியக் கூறியது.

"[2]கடிகமழ் கண்ணி நெடுவரை யாயத்து
வடிவே லண்ணனீ மறைப்பின்
முடியா தாகு முன்னிய வினையே" (31)
(களவியற். 32, மேற்.)

என்பது மறையேலென்றது.

"தூய்மை சான்ற தொல்குடித் தோன்றிய
வாய்மை நாவின் மதிதரன் போல
உயர்தவ முனிவர் சாரப்
பெயரா நிலையதிப் பிறங்குபெரு மலையே" (32)
(நம்பி. 147, மேற்.)

என்பது தோழி தலைமகன் குறியாதது கூறியது.

"[3]கொடுஞ்சிலை வலத்த ரடுந்தொழிற் சீற்றத்
தென்னைய ரிவ்வழி வருகுவர்
சென்மதி சிலம்ப நீங்குதா லுடைத்தே" (33)

என்பது தோழி படைத்து மொழிந்தது.

"[4]அலவ னாட்டலு மாட்டா ளாயமொடு
மலர்பூங் கானல் வண்டலு மயராள்

---

1. "எனக்காவி நின்னை வருத்திய மானவ் விலங்கிழையாள், தனக்காவி நானுந் தடமலை நாட தளையவிழ்பூஞ், சினைக்காவி னீகொய்த தேமென் றழையுஞ் சிலம்பிலந்தண், சுனைக்கா வியுமங் கருத்துவ ளேவிறை சோர நின்றே" (அம்பிகாபதிகோவை, 132.)

2. "மின்னை மறைத்தசெவ் வேல்வலத் தால்விழி ஞத்துவொன்னார், மன்னை மறைத்தவெங் கோன்வையை சூழ்பௌவ நீர்ப்புலவந், தன்னை மறைத்திள ஞாழல் கமழுந்தண் பூந்துறைவா, என்னை மறைத்திவ் விடத்தியை யாதுகொ லெண்ணியதே", "திண்டேர் வயமன்னர் சேவூ ரகத்துச் செருவழியக், கண்டே கதிர்வேல் செறித்தவெங் கோன்கொல்லிக் கார்ப்புனத்து, வண்டேய் நறுங்கண்ணி கொண்டே குறையுற வந்ததனால், உண்டே முடித்த லெனக்கு மறைப்பினு முள்ளகத்தே" (பாண்டிக்கோவை.)

3. "விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார், வரையிடை வாரன்மினைய —உரைகடியர், வில்லினர் வேலர் விரைசெலு மம்பினர், கல்லிடை வாழ்ந ரெமர்" (திணைமொழியைம்பது, 5); "யானை யுழலு மணிகிளர் நீள்வரைக், கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம், ஏனலு ளைய வருதன்மற் றென்னை கொல், காணினுங் காய்வ ரெமர்" (ஷை, 6.)

4. "நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள், பொறிமாண் வரியலவ னாட்டலு மாட்டாள், சிறுநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாட், கெறிநீர்த்தண்

ஓவியப் பாவை யொத்தனள்
யாதுகொ லண்ணல்யான் சொல்லு மாறே" (34)

(களவியற். 32, மேற்.)

இதுவுமது.

"பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே"

(குறுந். எஅ)

இதுவுமது.

"[1]வம்ப வரவினி ராகலி னுணரீர்
எம்பதத் தெளியளோ மடந்தை
இம்பர் வாழ்க்கை யியவுண்மன் னெமக்கே" (35)

(களவியற். 33, மேற்.)

என்பது தலைமகள் அரியளென்றது.

"[2]பொன்னியல் சுணங்கின் மென்முலை யரிவைக்கு
மின்னிவ ரொளிவே லண்ணல்
நின்னுறு விழுமங் கூறுமதி நீயே" (36)

(களவியற். 32, மேற்.)

என்பது நின்குறை நீயே கூறென்றது.

---

சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ" (தோல். களவு. 23, ந. மேற்.)

1. "நெருநலு முன்னு ளெல்லைபு மொருசிறைப், புதுவை யாகலிற் கிளத்த லுணி, நேரிழை வளைத்தோளின் றோழி செய்த, ஆருயிர் வருத் தங் களையா யோவென, எற்குறை யுறுதி ராயிற் சொற்குறை, எம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர், கட்காண் கடவு ளல்லளோ பெரும, ஆய்கோன் மிளகி னமலையங் கொழுங்கொடி, துஞ்சுபுலி வரிப்புறந் தைவரும், மஞ்சு சூழ் மணிவரை மன்னவன் மகளே" (தோல். களவு. 23, ந. மேற்.)

2. "தன்னையுந் தானுஞ் சாயலாட் கீதுரைப்பின், என்னையு நாணப் படுங்கண்டாய் - மன்னிய, வேயேய்மென் றோளிக்கு வேறு வினியொரு நாள், நீயே யுரைத்து விடு" (தோல். களவு. 23, ந. மேற்.); "சேயே யென நின்ற தென்னவன் செந்நிலத் தேற்றதெவ்வர், போயே விசும்பு புகச்செற்ற கோனந்தண் பூம்பொதியில், வேயே யனையமென் றோளிக்கு நின்கண் மெலிவுறுநோய், நீயே யுரையாய் விரையா ரலங்க னெடுந்தகையே", "புரைத்தா ரமர்செய்து பூலந்தைப் பட்டபுல் லாதமன்னர், குரைத்தார் குருதிப் புனல்கண்ட கோன்கொல்லிப் பாவையன்ன, நிரைத்தார் கரு மென் குழலிக்கு நீயே நெடுந்துறைவா, உரைத்தா லழிவதுண் டோசென்று நின்றுநின் னுண்மெலிவே" (பாண்டிக்கோவை.)

"[1]உளதா லம்மவோர் குறிப்பே யாவது
வளையோர் முன்கை மடந்தைதன்
முளையெயிற் றரும்பிய முகிழ்நகை தானே" (37)

என்பது நகைகொண்டாற்றல்.

"[2]பெறுதிற நாடினை மொழிமோ பெய்வளை
நறுநுதன் மாதர் நகாஅ
துறுதுய ரல்ல துய்யு மாறே" (38)

என்பது நகாதுரை யென்றது.

"[3]திருந்தா வாழ்க்கைச் சிறுகுடி யெமக்குப்
பெருந்தகை யண்ண னின்னிடைப்
பொருந்திய கேண்மையும் புரைவதோ வன்றே." (39)
(களவியற். 33, மேற்.)

என்பது யாம் உமக்கு இயையோ மென்றது.

"[4]புயற்குழன் மடந்தையர் பூங்கரும் புலக்கையின்
நகைக்கவி னவாய வாமென

---

1. "மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந் தூறமுதே, ஒத்தகஞ் சேர்ந்தென்னை யுய்யநின் ளூன்றில்லை யொத்திலங்கு, முத்தகஞ் சேர்மென் னகைப்பெருந் தோளி முகமதியின், வித்தகஞ் சேர்மெல்லெ ளுக்கமன் ளூவென் விழுத்துணையே" (சிற். 106.)

2. "நயனின் மையிற் பயனிது வென்ளூது, பூம்பொறிப் பொலிந்த வழலுமி ழகன்பைப், பாம்புயி ரணங்கி யாங்கு மீங்கிது, தகாஅது வாழியோ குறுமக ணகாஅ, துரைமதி யுடையுமென் னுள்ளஞ் சாரற், கொடுவிற் கான வன் கோட்டுமாத் தொலைச்சிப், பச்சூன் பெய்த பகழிபோலச், சேயரி பரந்த வாயிழை மழைக்கண், உரூஅ நோக்க முற்றவென், பைத னெஞ்ச முய்யு மாறே" (நற். எடு.)

3. "தகைமாண் சிறப்பிற் சான்ளூர்க் கொத்த, வகையமை வனப் பினை யாகலி னுலகமொடு, பாற்படற் பால மன்ளூ காப்புடுத், தோங்குய ரடுக்கத்துச் சாந்துவளர் நனந்தலை, நெடுவரை மருங்கிற் குடிமை சான்ளூர், இன்ன ரென்ளூ தின்பம் வெஃகிப், பின்னிலை முயற்சியின் வருந்தினும், நும்மோ ரன்னோர்க்குத் தருவதோ வன்றே" (தோல். களவு. 23, ந. மேற்.); "இவளே, கான னண்ணிய காமர் சிறுகுடி, நீனிறப் பெருங்கடல் கலங்க வுள் புக்கு, மீனெறி பரதவர் மகளே நீயே, நெடுங்கொடி துடங்கு நியம மூதூர்க், கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே, நிணச்சுரூ வறுத்த வுணக்கல் வேண்டி, இனப்புள் ளோப்பு மெமக்குநல னெவனோ, புலவு நாறுதுஞ் செலநின் றீமோ, பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை, நும்மொடு புரை வதோ வன்றே, எம்ம னோரிற் செம்மலு முடைத்தே" (நற். சுடு.)

4. "நீடுநீர்க் கான னெருநலு நித்திலங்கொண் டைய வந்திர், கோடுயர் வெண்மணற் கொற்கையெம் மூரிவற்றூற் குறைவிலம்யாம், ஆடுங் கழங்கு

அவைக்குநர் மாதோ வலங்குகதிர் முத்தே" (40)

என்பது கையுறை யெளிமை கூறியது.

"மாணெழி லண்ணல் வாங்குதும் யாமே
சேணுயர் சிலம்பில் யங்கணும்
காணல மன்னேவிக் கமழ்பூந் தழையே" (41)
(களவியற். 33, மேற்.)

என்பது கையுறை எமக்குத் தகாதென்றது.

"மாமலைச் சிலம்ப மயிலேர் சாயற்
றேமொழி நிலைமை தெரிந்தபின்
பூமென் றண்டழை கொள்குவன் புரிந்தே" (42)
(சளவியற். 34, மேற்.)

என்பது தலைமகள் நிலைமை யறிந்து கொள்குவனென்றது.

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே"
(குறுந். கஎ.)

என்பது மடலேறுவனென்றது.

"கொள்ளலி ரம்ம வருளினி ராதலிற்
புள்ளின் பெருங்கிளை யலற
வள்ளிதின் விரிந்த மாப்பனை மடலே" (43)

என்பது மடலேற்று விலக்கியது.

"எளிதோ வம்ம வொளியிழை மடந்தை
கிளிபுரை கிளவியு நடையும்
இளமென் சாயலு மெழுதுமா றுமக்கே" (44)

இதுவுமது.

"நன்னுத லாய மெவ்வயி னியலினும்
என்வழிப்படர்குவண் மாதோ
வின்முனை வாழ்நர் மென்மட மகளே" (45)

இதுவுமது.

"அடுந்திறல் வேழ மகற்றி யெம்வயிற்
கடுந்துய ரொழித்தனை யாதலின் மடந்தை
கண்ணு மேனியும் புரையும்
தண்ணறுங் குவளையொடு தழைதந் தீமே" (46)

என்பது தழையெதிர்கோடல்.

---

மணிவிளக்கு மம்மனையும் பிறவு மெல்லாம், பாடி யவைப்பனவும் பந்தாடப் படுவனவும் பனிநீர் முத்தம்"(இறை. 12, மேற்.); "துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர், அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்" (யா. கா. ஒழிபு. மேற்.)

"அன்று யொருவரென் பொய்ம்மொழி நசைஇ
இன்னு மிவ்வழி வருகுவர்
என்னை யாமவர்க் கியம்புவ தினியே" (47)

என்பது மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்.

"காணாய் தோழிநம் மேனற் றண்புனம்
பேணா மன்னர் பெயர்புறங் கொடுத்தென
வைவேற் றானை வவ்வலிற்
செவ்வாய்ப் [1]பாசினங் கவர்ந்துகொண் டனவே" (48)
(களவியற். 35, மேற்.)

என்பது நாணொடு நீங்கல்.

"நெருந லிவ்வழிப் பெடைபுறந் தரூஉம்
அலவன் றன்னையு மென்னையு நோக்கி
நொந்தனன் பெயர்ந்த துறைவன்
வந்திலன் மாதோ வருந்துமென் மனனே" (49)

என்பது வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தது.

"தானும் யானுமென் றிருவே றிலமே
யானு மறியாக் கரப்பினள்
மானுண் கண்ணி வரையர மகளே" (50)

என்பது தோழி தழீஇக்கொண்டது.

"தந்தோள் மேனாள் வெந்திறற் களிற்றின்
உறுதுய ரொழித்துத் தோனே நிறனழிந்து
வாடிப கொல்லோ மடந்தை
கோடிய ரடுக்கத்த கொயற்கருந் தழையே" (51)

என்பது கையுறை ஏற்பித்தது.

"தந்துநீ யளித்த தண்டழை காண்டலும்
வந்தன ளெதிர்ந்த மடந்தை நெஞ்சம்
மண்மிசை விளங்கிய வழுத்தூர் மதிதரன்
நுண்ணியற் பனுவ னுழைபொரு ளுணித்த
வாய்மொழி யமிர்த மடுத்தவர் மனமென
ஆனில பெற்றன்றி யானறிந் திலனே" (52)
(நம்பி. 149, மேற்; களவியற். மேற்.)

என்பது கையுறை யெதிர்ந்தமை கூறிற்று.

"தழைகெழு சினைய பன்மரந் துவன்றிய
மழைதவழ் பூம்பொழில் யாவரும்
விழைதகைத் தம்மவெம் வியன்புன மருங்கே" (53)

என்பது பகற்குறியிடம் உரைத்தது.

---

[1]பாசினம் - கிளி.

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழற்றொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"

(குறுந். க)

என்பது தலைமகளைக் குறிவயின் நிறுத்திப் பெயர்ந்தது.

"பேதுறல் வாழிநின் காதற் றோழி
கைபுனை கோலமெனை மெய்பெற் றன்றே
ஐயம் யாவது மின்றிப்
பெய்பூங் கோதை பெருங்கவின் கொளவே" (54)

(களவியற். மேற்.)

என்பது தான் தோழியிற் புணர்ந்தமை உணர்த்தியது.

"மணிநீர்ப் பொய்கை யணிபெற நிவந்த
தாமரை யனையளித் தூமலர்க் கண்ணி
ஞாயி றனையன் யானே யாவதும்
வெஞ்சொல் யான்வியந் துரைப்பவும்
எஞ்சாக் கவினிவ ளெய்த லானே" (55)

(களவியற். மேற்.)

என்பது தலைமகள் நிலைமை கூறியது.

"நறும்பூங் கண்ணியும் பெருந்தண் கோதையும்
நகைவாய்ப் பிணையலு முகைவாய்ச் சூட்டும்
புனைந்தனை யருளல் வேண்டும்
சினங்கெழு கானவன் செழுமட மகளே" (56)

(நம்பி. 149, மேற்; களவியற். மேற்.)

என்பது கொண்டு நீங்கல். (கள)

## சா. தோழியிற் கூட்டம் - இரவுக்குறி

18. காதன் மிகவின் வாய்விடு கிளவியும்
தோழி சிறைப்புறத் தேகிடு கிளவியும்
செறிப்பறி வுறுத்தலுஞ் சூளென நினைத்தலும்
இறப்ப நுவறலு மிருள்வர வேண்டலும்
மறுத்தலு நேர்தலுங் குறியிடம் வகுத்தலும்
நயப்ப மொழிதலு மவன்வர வுணர்த்தலும்
குறித்துழி யுய்த்தலும் பெயர்ச்சியொ டல்குறிச்
சிறைப்புற மாகச் செப்பலு நோதலும்
இறைப்புற மாகிய விரவுக் குறியே.

எ - து. இரவுக்குறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாய்விடு கிளவி முதலாகத் தலைமகன் நெஞ்சொடு நோதல் ஈறாகச் சொல்லப்பட்டன, [1]இல்வரை இகவா இரவுக்குறி யாம் என்றவாறு.

"[2]அடும்பின் மென்கொடி துமியக் கடும்பகற்
கொடுங்கழி மருங்கின்வந் தகன்ற
நெடுந்தே ரண்ணல்பின் சென்றதென் னெஞ்சே" (57)
(களவியற். மேற்.)

என்பது தலைமகள் ஆற்றாமைக்கண் வாய்விடு கிளவி.

"[3]செவ்வா யன்னநின் சேவலு நீயும்
கைவே லண்ணலைக் கழறின்
எய்துவ துளதோ வியம்புமி னெமக்கே" (58)

இதுவும் அது.

"ஆய்கதிர்ச் செல்வ [4]னத்தஞ் சேர்ந்தென
நோய்கூர் நெஞ்சின ருழப்பப்
போயின மாதோ புள்ளினம் பிரிந்தே" (59)
(களவியற். மேற்.)

என்பது தலைமகன் சிறைப்புறமாகப் பிறிதின்மேல் வைத்துத் தோழி கூறியது.

"[5]மாலை மணந்து காலைப் பிரியும்
காதல ருடையையோ கறைநீங்கு மதியம்

---

1. "இரவுக் குறியே யில்லகத் துள்ளும், மனையோர் கிளவி கேட்கும் வழி யதுவே, மனையகம் புகாஅக் காலை யான" (தொல். களவு. 40); "இரவுக் குறியே யில்வரை யிகவாது" (இறை. 20); "இரவுக் குறியே யில்வரை யிகவா, துணை வுரைத்த வுரையி னுனை" (ஷை. ஷை. மேற்.); "இரவுக்குறி, இல்வரை யிகவா வியல்பிற் றாகும்" (நம்பி. 38.)

2. "கவட்டிலை யடும்பின், செங்கேழ் மென்கொடி யாழி யறுப்ப, இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ" (அகநா. அ0 : 8 - 10); "சென்றது கொல்..... மொய்ம்மலர்த்தார் மாறற், குழந்துபின் சென்றவென் னெஞ்சு" (பழம்பாடல்); "பொருமா மணிமுடி மன்னரைப் பூலந்தைப் பூவழித்த, குருமா மணிவண்ணன் கோனெடு மாறன் குமரிமுந்நீர், அருமா மணி திகழ் கானலின் வாய்வந் தகன்றகொண்கன், திருமா மணிநெடுந் தேரோடு சென்றதென் சிந்தனையே" (பாண்டிக்கோவை.)

3. "ஒண்டுவி நாராய்நின் சேவலு நீயுமாய், வண்டுதே பூங்கானல் வைகலுஞ் சேறிரால், பெண்டுதே வந்தே மெனவுரைத்தெங் காதலரைக், கண்டீர் கழறியக்காற் கானல் கடிபவோ" (தொல். களவு. 20, ந. மேற்.)

4. அத்தம் - அத்தகிரி; "அத்தமென்னும், பொன்னஞ் சிலம்பு" (பாண்டிக்.)

5. "கங்குற் சிறந்து பகலொளி வாடநின் காதலரும், எங்கட் கிசைந்த விறைவர்கொல் லோவிமை யோரெவரும், துங்கக் கொடுமுடி மந்தர

இரவே யாயி னல்லை பகலே
மெல்லியற் கொடிச்சி நுதலினும்
புல்லென் றனையா னோகோ யானே" (60)

(களவியற். மேற்.)

இதுவும் அது.

"[1]அன்னை வாழி நெருநன் மாதர்
மென்முலை யரும்பிய வாகமும்
என்னும் பன்முறை நோக்கின ளினிதே" (61)

(களவியற். மேற்.)

என்பது குறிப்பினாற் செறிப்பறிவுறுத்தது.

"பாங்கின ராகித் தீங்குதலைத் தருநரின்
ஈங்குப் பிரிவு சூழ்ந்தன்
றியாங்கன மொழிகோ வேங்கையது வினையே" (62)

(களவியற். மேற்.)

என்பது சிறைப்புறத்துச் செறிப்பறிவுறுத்தது.

"உரையா யண்ணல் செய்திற முரிதினின்
விரைவாய் வேங்கை விரியக்
குரல்சாய்ந் தொழிந்ததெங் கொய்புனத் தினையே" (63)

என்பது வெளிப்படச் செறிப்பறிவுறுத்தது.

---

நாகந் தொடுத்துழல, வங்கப் புணரி கடைந்தவந் நாள்வந்த வான்மதியே" (அம்பிகாபதிகோவை, 250.)

1. "பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென, ஆகத் தரும்பிய சுணங்கும் வம்புடைக், கண்ணுருத் தெழுதரு முலையு நோக்கி, எல்லினை பெரிதெனப் பன்மாண் கூறிப், பெருந்தோ ளடைய முயங்கி நீடுநினைந், தருங்கடிப் படுத்தனள் யாயே" (அகநா. கஙo : 1 - 6); "அன்னை நெருந லணியிழையாள் கொங்கையையும், என்னையு நோக்கி யிருவரையும் - புன்னை, வளையாடு கானல்வாய் மானனை யீ ரின்று, விளையாடு மென்றாள் விழைந்து" (கிளவித்தெளிவு); "நீர்வண்ணன் வெண்டிரை மேனின்ற வேந்தனெல் வேலியொன்னார், போர்வண்ணம் வாட்டிய பூழியன் பூந்தண் குருந்தொசித்த, கார்வண்ணன் போல்வண்ணன் காவிரி நாடன்ன காரிகையாள், ஏர்வண்ண நோக்கிநின் றென்னையு நோக்கின ளெம்மனையே", "உளமலை யாமைத் திருத்திப் பொருவா னுடன்றெழுந்தார், களமலை யாமைக் கடையல்வென் றான்கடற் றானையன்ன, வளமுலை வான்முறு வற்றைய லாகத்து வந்தரும்பும், இளமுலை நோக்கிநின் றென்னையு நோக்கின ளெம்மனையே" (பாண்டிக் கோவை); "சிலம்பிற் போகிய செம்முக வாழை, அலங்க லந்தோ டசை வளி யுறுதொறும், பள்ளி யானைப் பரூஉப்புறந் தைவரும், நல்வரை நாடனொ டருவி யாடியும், பல்விதழ் நீலம் படுசுனைக் குற்றும், நறுவீ வேங்கை யின வண் டார்க்கும், வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலும், அரிய போலுங் காதலந் தோழி, இருங்கவ லடுக்கத் தென்னையு ருழுத, கரும்பெனக் கவி

"[1]அம்மென் சாய லாயிழை திறத்துப்
பொய்ம்மை நின்வா யுளதெனின்
மெய்ம்மை யாரோ விளம்புநர் பிறரே" (64)

என்பது சூளென நினைந்தது.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

(குறுந். ௧௮.)

என்பது ஆற்றுளென்பதுபடக் கூறியது.

"ஒள்ளிணர் வேங்கை யொள்ளிணர் வேங்கைநின்
கிளையொடு மகிழாக் கிளைதபு வேங்கை
நீயே மலர்தந் தோயே
[2]ஆயோ வெனுங்குர லாவயிற் கடிந்தே" (65)

என வருவனவும் கொள்க.

"வரிவளைத் தோளி யொருதனி யொழியப்
பிரிது மென்றி யாயிற் பெரிதழிந்து
பரியல் வாழியோ நெஞ்சே
இருளிடை யேகலு மெய்துமா னமக்கே" (66)

(களவியற். மேற்.)

என்பது இருள்வர வேண்டல்.

---

னிய பெருங்குர லேனல், கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென, நம்மவண் விடுநள் போலாள் கைம்மிகச், சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை, மெல்லிய லொலிவருங் கதுப்பொடு, பல்கா லேனுக்கு மறனில் யாயே" (அகநா. ௩௦௨.)

1. "நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன, பொய்யொடு மிடைந்தவை தோன்றின், மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே" (அகநா. ௨௮௬ : 15 - 7); "நெய்யொன்று; வேனெடு மாறன்றென் னாடன்ன நேரிழையிம், மையொன்று வாட்கண் மடந்தை திறத்திட் டறந்திரிந்து, பொய்யொன்று நின்கண் ணிகழுமென் றூற்பின்னைப் பூஞ்சிலம்பா, மெய்யொன்று மின்றி யொழியுங்கொல் லோவிவ் வியலிடமே", "திரைப்பா லிரும்புனற் சேனூ ரெதிர்நின்ற சேரலர்கோன், வரைப்பா லடையச்செற் றூன்வையை யன்னூ டிறத்துவண்டார், விரைப்பா னறுங்கண்ணி யாய்பொய்ம்மை நீசொல்லின் மெய்ம்மையென்ப, துரைப்பார் பிறரினி யாவர்கொல் லோவிவ் வுலகி னுள்ளே" (பாண்டிக்கோவை.)

2. "ஆயோ வெனுங்குர லந்தோ புனத்தை யழிக்கின்றதே" (தனிப்.); "வெஞ்சொற் பேசும் வேடர் மடவா ரிதண மதுவேறி, அஞ்சொற் கிளிக ளாயோ வென்னு மண்ணு மலையாரே" (தே. திருஞா.)

"நிரைதா ரண்ண னெடுங்கழை யுகுத்த
விரிகதிர் நித்திலம் பரத்தலின்
இரவும் பகல்போன் றிலங்குமா லிவணே" (67)
(களவியற். மேற்.)

என்பது இரவின் வருதல் அரிதென்றது.

"தேரா னல்லன் பேருணர் வினனே
இகந்தோ னல்ல னன்புபெரி துடையன்
இனையோ னினைய னாகுதல்
மனனிறை குன்ற வாற்று மாறே" (68)

என்பது நேர்தல்.

"[1]நறைகமழ் சாந்தமெஞ் சாந்தே பூவும்
பொறைமலி காந்தளம் பூவே யாடிடம்
சிறைவண் டார்க்குஞ் செயலையம் பொழிலே" (69)
(களவியற். மேற்.)

என்பது இரவுக்குறியிடம் கூறிற்று.

"[2]வேய்பயி லிறும்பின் வியலறைச் சிலம்பின்
வால்வெள் ளருவி முழவிற் றதும்பும்
சேயுயர் மாமலைச் சிலம்பனும்
ஆய்நுத லரிவை யருகினன் பெரிதே" (70)

என்பது இரவுக்குறி நயப்பித்தது.

"ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே" (குறுந். அஅ.)

என்பது மறுத்தது.

"கொடுவரி வயப்புலி தாக்கக் கொலையுய்ந்து
நடுநாள் யாமத் தருஞ்சுர நீந்திப்
பதிவயிற் புகுந்தோற் கியாவதும்
கதவந் திறத்தல் கனங்குழை கடனே" (71)

என்பது வலிதாகச் சொல்லி நயப்பித்தது.

---

1. "வந்தணங் காமன்னர் தேயமுன் னுண்மழை யேயுயர்த்த, கந்தணங் காமத யானைக் கழன்மன்னன் கார்ப்பொதியிற், சந்தனஞ் சாந்துசெங் காந்தளம் பூத்தழல் போல்விரியும், கொந்தணங் கீர்ம்பிண்டி யாம்விளை யாடுங் குளிர்பொழிலே", "காந்தளம் போதெங் கருங்குழற் போது கடைய லொன்னார், தாந்தளர்ந் தோடவை வேல்கொண்ட வேந்தன்றண் ணம்பொதி யிற், சாந்தமெஞ் சாந்தம் விளையா டிடமுந் தளையவிழும், பூந்தளம் பிண்டி யெரிபோல் விரியும் பொழிலகமே" (பாண்டிக்கோவை.)

2. "பெருவரை மிசையது நெடுவெள் ளருவி, முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பி" (குறுந். எஅ: 1 - 2.)

"1புள்ளுந் துயில்புடை பெயர்ந்தன புனலுள்
வள்ளிதழ்ப் புன்னை மணிக்காய் வீழும்
வந்தனன் கொல்லோ தானே
வெந்திற லண்ண லினைந்தனன் விரைந்தே" (72)
(களவியற். மேற்.)

என்பது தோழி வரவுணர்ந்தது.

"2அன்று யன்னாய் காணென் றிருமுறை
தன்யா னெடுப்பவுந் துயின்மடிந் தனளே
இலங்கிலை நெடுவே லண்ணலும்
புலம்புறுய ரகலக் குறிவந் தோனே" (73)
(களவியற். மேற்.)

என்பது வரவுணர்த்தியது.

"3கள்ளவிழ் கோதைநின் கண்போற் குவளையும்
முள்ளெயி றரும்பு முல்லையும்
கொள்குவம் போதுநங் குளிர்பொழி லிடத்தே" (74)
(களவியற். மேற்.)

என்பது தலைமகன் வரவுணர்ந்து தோழி தலைமகளைக் குறிவயின் உய்த்தது.

---

1. "அன்னை வாழியோ வன்னைநம் படப்பைப், பொம்ம லோதி யம் மென் சாயல், மின்னென நுடங்கிடைக் கின்னிழ லாகிய, புன்னை மென்காய் போகுசினை யிரிய, ஆடுவளி தூக்கிய வசைவிற் கொல்லோ, தெண்ணீர்ப் பொய்கையுள் வீழ்ந்தன, எண்ணினை யுரைமோ வுணர்குவல் யானே" (தொல். களவு. 42, ந. மேற்.); "புட்சிலம்பு கின்றமையாற் புன்னைக்காய் பூம்புனலி, னுட்சிலம்ப வீழ்கின்ற வோசையாற் - கட்சிலம்பு, கொந்தார் நறும்பொழிலி னுள்ள குறியிடத்து, வந்தான்கொல் கள்வ மகன்" (கிளவித் தெளிவு); 'தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற காலத்து ஒருநாள் தலைமகன் செல்லாமே அவனாற் செய்யப்படும் குறிப்புக்கள் தாமே வெளிப் பட்டன; அவை புன்னைக்காய் நீரி விடுதலும், புள்ளெழுப்புதலுமென இவை. அவை வேறுனும் நிகழுமாறு: புன்னைக்காய் மூக்கூழ்த்தும் விழும்; வளியெறியவும் விழும்; புள்துளக்கவும் விழும்' (இறை. 17, உரை.)

2. "அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத், தண்ணயத் தமன்ற கூதளங் குழைய, இன்னிசை யருவிப் பாடு மென்னதூஉம், கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை, ஊட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை, ஓங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென, முழுமுத றுமிய வுருமெறிந் தன்றே, பின்னுங் கேட்டியோ வெனவுமஃ தறியா, தன்னையுங் கனைதுயின் மடிந்தன ளதன்றலை, மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுதே காதலர், வருவ ராயிற் பருவ மிதுவெனச், சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயிற், படர்ந்த வுள்ளம் பழுதன் றாக, வந்தனர் வாழி தோழி" (அகநா. கூஅ: 1-14.)

3. "ஆழிக் கடல்வையங் காக்கின்ற கோனரி கேசரிதன், பாழிப் பகைசெற்ற பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்புறவிற், பூழிப் புறமஞ்ஞை யன்ன

"காவி கண்டனை யாயிற் றாவி
மயிலேர் சாயற் குயிலேர் கிளவி
பெயர்ந்தனை யருளல் வேண்டும்
இங்கிவை காணிய வென்னொடும் புணர்ந்தே" (75)

என்பது கொண்டு நீங்கல்.

"1வணர்சுரி யைம்பால் வாணுத லரிவை
அணைதிற மறியலன் யாவதும்
புணர்துயின் மறந்தன புள்ளினம் பெரிதே" (76)

(களவியற். மேற்.)

என்பது அல்லகுறிப்படுதல் சிறைப்புறமாகச் சொல்லிற்று.

"2வரிவளைப் பணைத்தோண் மடந்தை யுள்ளி
அரியது நசைஇய நெஞ்சம்
பெரிது மெவ்வம் பெறற்பா லோயே" (77)

(களவியற். மேற்.)

என்பது தலைமகன் நெஞ்சொடு நொந்தது. (கஅ)

---

நல் லாய்கொள்கம் போதுதியேற், றுழிக் குவளைநின் கண்போல் விரியுந் தடமலரே", "விளக்கின்ற பல்புகழ் வேந்தன் விசாரிதன் விண்டெதிர்ந்து, திளைக்கின்ற மன்னரைச் சேவூ ரழித்தவன் றீந்தமிழ்போல், வளைக்கொன்று கைம்மங்கை யாய்சென்று கோடுநின் வாயுள்வந்து, முளைக்கின்ற முள்ளெயிற் றேர்கொண் டரும்பின முல்லைகளே" (பாண்டிக்கோவை.)

1. "அறைவா யதிர்கழல் வேந்திக லாற்றுக் குடியழித்த, கறைவா யிலங்கிலை வேன்மன்னன் கன்னியங் கானலின்வாய், இறைவா யணிவளை யாயென்னை கொல்லோ விரவினெல்லாம், துறைவா யிளம்புன்னை மேலன்ன மொன்றுந் துயின்றிலவே", "பூநின்ற வேன்மன்னன் பூலந்தை வான்புகப் பூட்டழித்த, வேனின்ற வெஞ்சிலை வேந்த னிரணுந் தகனறியும், பானின்ற வின்றமி ழன்னநல் லாய்நம்பைங் கானலின்வாய்த், தூநின்ற மென்சிறை யன்னமின் றொன்றுந் துயின்றிலவே" (பாண்டிக்கோவை.)

2. "அன்னநடைப் பேதை யருமை யறியாதே, என்னை வருத்துகின்ற தென்கொலோ - துன்னி, வஞ்சமே யன்ன மலர்விழியா லீடழியும், நெஞ்சமே கட்டுரையாய் நீ" (கிளவித்தெளிவு); "தாவி னன்பொன் றைஇய பாவை, விண்டவ ழிளவெயிற் கொண்டுநின் றன்ன, மிகுகவி னெய்திய தொகுகுர லைம்பாற், கிளையரி ஞணற் கிழங்குமணற் கீன்ற, முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய், நயவன் றைவருஞ் செவ்வழி நல்யாழ், இசையோர்த் தன்ன வின்றீங் கிளவி, அணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற், றினம்படி நீரிற் கலங்கிய பொழுதிற், பெறலருங் குரைய ளென்னாய் வைகலும், இன்னா வருஞ்சுர நீந்தி நீயே, என்னை யின்னற் படுத்தனை மின்னுவசிப், புரவுக்கால் கடுப்ப மறலி மைந்துற்று, விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப், படைநிலா விலங்குங் கடன்மரு

## ௫. வரைவு கடாதல்

௧௬. வருநெறி நினைந்து வார லென்றலும்
காப்பிடை யீட்டிற் கையறு கிளவியும்
வருக வென்றலும் வார லென்றலும்
படைத்து மொழிதலுங் குடித்திறங் கூறலும்
அரிவையை யின்றியா னறிந்தே னென்றலோ
டுரியன கிளந்த பிறவுந் தொகைஇ
வரைவு கடாத லாகு மென்மனார்.

என்பது வரைவுகடாதல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவியும், வரவு விலக்கலும், காப்பின் இரங்கிய கையறு கிளவியும், இரவினும் பகலினும் நீவா வென்றலும், வாரலென்றலும், படைத்து மொழிதலும், குடித்திறங் கூறலும், மானிட மகளாதல் இன்று அறிந்தேனென்றலுமென இன்னவெல்லாம் வரைவுகடாதலென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

---

டானை, மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன், பொருமுரண் பெறுஅது விலங்குசினஞ் சிறந்து, செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி, ஓங்கு திரைப் பௌவ நீங்க வோட்டிய, நீர்மா ணெஃக நிறத்துச்சென் றழுந்த, கூர்மத னழியரோ நெஞ்சே யானு, தெளிய ளல்லோட் கருதி, விளியா வெவ்வந் தலைத்தந் தோயே' (அகநா. ௨௧௨); "வடமலை மிசையோன் கண்ணின் முடவன், தென்றிசை யெல்லை விண்புகு பொதியிற், குருடை நெடுஞ்சுனை நீர்வேட் டாங்கு, வருந்தினை வாழியென் னுள்ளஞ் சாரற், பொருது புறங் கண்ட பூநுத லொருத்தல், சிலம்பிழி பொழுதி னத்தம் பெயரிய, வல்லிய மடுக்கத் தொடுங்கு நல்வரைக், கல்லக வெற்பன் மடமகள், மெல்லியல் வனமுலைத் துயிலுற் றோயே" (தொல். களவு. 43, ந. மேற்.); "ஒளியார் திருநுத லாளை யெளியளென் றுன்னிவந்து, விளியா வருந்துயர் செய்தமை யால்விழி ஞத்துவென்ற, களியார் களிற்றுக் கழனெடு மாறன் கடிமுனைமேற், றெளியா வயவரிற் றேய்வா யளியவென் சிந்தனையே", "ஏரார் குழன்மட வாளை யெளியளென் றெண்ணிவந்து, தீரா விழுமந்தந் தாய்தென்னன் சேலூர்ச் செருவடர்த்த, காரார் களிற்றுக் கழன்மன்னன் மாறன் கழல்பணிந்து, சேரா வயவரிற் றேய்வா யளியவென் சிந்தனையே" (பாண்டிக்கோவை); "இல்லோ னின்பங் காமுற் றாஅங், கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி, நல்ல ளாகுத லறிந்தாங், கரிய ளாகுதலறியா தோயே", "குணகடற் றிரையது பறைதபு நாரை, திண்டேர்ப்பொறையன் றொண்டி முன்றுறை, அயிரை யாரிரைக் கணவந் தாங்குச், சேய ளரியோட் படர்தி, நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே" (குறுந். ௧௨௦, ௧௨௮.)

"[1]ஆறே யரிய வென்னு யாறே
மல்குபுனல் பரந்து கல்லுயர்ந் தனவே
இரவின் வருவர்நங் காதலர்
உரவேன் றேழியா னுயிர்வாழ் வேனே" (78)

என்பது ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

"வாரா தீமோ சார னாட
[2]உறுபுலி கொன்ற சிறுகண் யானை
ஆறுகடி கொள்ளு மருஞ்சுரம்
ஊறுபெரி துடைய தமியை நீயே"

(சிற்றட்டகம்: களவியற். மேற்.)

என்பது வரவு விலக்கிற்று.

"[3]யாயே துயின்மறந் தனளே யாயினும்
நாயு மூரு நனிதுஞ் சலவே
காவ லாள ரதனினுந் துயிலார்
ஆய்கதிர் மதியநின் றலரும்
யாவ தாங்கொ லேந்திழை நிலையே" (79)

(களவியற். மேற்.)

என்பது காப்பின் இரங்கிக் கையறுகிளவி.

"பகலே வரினு மாற்றாள் பகலின்
றிரவின் வரினு மந்நிலை யினளே
விரைசேர் மார்ப செய்திறம் விளம்பே" (80)

என்பது இரவினும் பகலினும் நீவாவென்றது.

[4]"முருகற் செவ்வியொடு பகல்வரி னிவ்வழி
விரவியற் கவ்வை யஞ்சுதும்
இரவரி னதனினும் பெரிதஞ் சுதுமே" (81)

(களவியற். மேற்.)

என்பது இரவினும் பகலினும் வாரலென்றது.

---

1. "ஆறே யருமா பினவே யாறே, சுட்டுநேர்ப் பனிக்குஞ் சூருடை முதலைய, கழைமாய் நீத்தங் கல்பொரு திரங்க, அஞ்சுவந் தமிய மென்னாது .........வாணடந் தன்ன வழக்கருங் கவலை, உள்ளுந ருட்குங் கல்லடார்ச் சிறுநெறி, அருள்புரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக, வந்தோன் கொடியனு மல்லன்" (அகநா. எஉ: 7 - 19.)

2. "காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல், ஆறுகடி கொள்ளு மருஞ்சுரம்" (அகநா. சுகு: 16 - 7.)

3. "இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்" (அகநா. கஉஉ) என்னும் செய்யுளைப் பார்க்க.

4. "கந்த னெனநீ கதிர்வேல் வலனேந்திச், செந்தினைசூழ் குன்றச் சிறுகுடிவாய் - வந்தருளி, நின்று விறவுளர்கண் மெய்யுணரி னேரிழைக்கு, நன்றுத லுண்டோ நவில்" (பழம்பாட்டு); "துறுக னண்ணிய கறிியவர்

"[1]கழிப்பூங் கான லிவ்வழி நெருநல்
வழிப்படார்ந் துண்டோர் தேரென
அழித்து நோக்கின ளெம்மனை பெரிதே" (82)

என்பது தோழி படைத்து மொழிந்தது.

"[2]கழைகெழு சிலம்பி னருவி யாடும்
மழைமத யானையொடு பிடிகண்
டுழைகெழு நோக்கி யுன்னினள் பெரிதே" (83)

(களவியற். மேற்.)

இதுவும் அது.

"வரைதல் வேட்டனி ராயிற் பதிவயின்
எதிர்கொள் செவ்விய ரெமரே யிவ்வயின்
நறுநுதற் பெருந்தோட் பேதையும்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே" (84)

(களவியற். மேற்.)

என்பது குடித்திறம் கூறியது.

---

படப்பைக், குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரும், மெய்ம்மலி யுவகைய னந்நிலை கண்டு, முருகென வுணர்ந்து முகமன் கூறி, நெடுவேட் பரவு மன்னை" (அகநா. உஎஉ: 10 - 15); "தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை, நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின், மணங்கமழ் நாற் றத்த மலைநின்று பலிபெறூஉம், அணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே" (கலி. ருஉ: 7 - 10.)

1. "பானாட் டனித்தோர், தேர்வந்து பெயரு மென்ப வதற் கொண், டோரு மலைக்கு மன்னை" (குறுந். உசசு: 3 - 5); "பெருநீ ரழுவத் தெந்தை தந்த, கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி, எக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச், செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி, ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித், தாழை வீழ்கயிற் றூச றூங்கிக், கொண்ட விடுமணற் குரவை முனையின், வெண்டலைப் புணரி யாயமொ டாடி, மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப், பல்பூங் கான லல்கினம் வருதல், கவ்வை நல்லணங் குற்ற விவ்வூர்க், கொடிதறி பெண் டிர் சொற்கொண் டன்னை, கடிகொண் டனளே தோழி பெருந்துறை, எல்லையு மிரவு மென்னாது கல்லென, வலவ னய்ந்த வண்பரி, நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே" (அகநா. உ0); "அன்னாய் நெருந னிகழ்ந்தது கேளயல் வேந்திறைஞ்சும், பொன்னார் கழனெடு மாறன் குமரியம் பூம்பொழில்வாய், மின்னார் மணிநெடுந் தேர்கங்குல் வந்தொன்று மீண்டதுண்டால், என்னை முகஞ்சிவந் தெம்மையு நோக்கின ளெம் மனையே" (பாண்டிக்கோவை.)

2. "பருவர னெஞ்சமொடு மேவ றவிராது, செருவேலு தியன் சேண் விளங்கு முசுறிக், கருங்கழிக் காவியொடு கலாஅங் கருதிய, பெருங்கண் மா யோளே நாங்கடி கொண்ட, செந்தினை கவர்ந்த பைங்கண் வேழம், கரு வரைப் பிரசங் கையின் வாங்கி, ஈயின மிரிய வீசி வயவுப்பிடி, வாயுறக்

"இதற்கொண் டினியாந் தெளிது மேனாள்
மதிக்கோ டுரிஞ்சு மால்வரை வாழ்க்கைக்
கடவு ளாக வல்லது
மடவரன் மாதரை மதித்தன்றோ விலமே" (85)
(களவியற். மேற்.)

என்பது இன்று அறிந்தேனென்றல். (கசு)

## சு. உடன்போக்கு வலித்தல்

உ0. அலர்பெரி தென்றலு மயல்வரை வுரைத்தலும்
உலகியல் கூறி நீயுரை யென்றலும்
சுரஞ்செல வாற்று நின்னோ டென்றலும்
வருந்திற முரைத்தலும் வழிநயப் பித்தலும்
விரும்பின னேர்ந்த பாவக் கிளவியும்
பொருந்து மென்மனார் போக்குடன் வலித்தல்.

என்பது உடன்போக்கு வலித்தலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அலர் பெரிதென்றல் முதலாகப் பாவக் கிளவி ஈறாகச் சொல்லப்பட்ட கிளவிகளை உடைத்தென்று சொல்லுவர் உடன்போக்கு வலித்தலை. எ - று.

"[1]நிலவோ ரன்ன வெண்மணற் பாக்கத்து
மலரேர் கூந்தன் மடந்தைக்
கலரா கின்றா லண்ணனின் னருளே" (86)
(களவியற். மேற்.)

என்பது முன்னின்று அலர் பெரிதென்றது.

---

கொடுத்த செவ்வி நோக்கி, யுருகு நெஞ்சமோடு நீடுநினைந், தருகுசென் றுமவியு மென்னையு நோக்கிக், கழலொலி கரப்ப வொதுங்கி, நிழலென நிற்ப னொருநினை நினைந்தே" (நம்பி. 148, மேற்.); "பண்ணிவர் சொல்லி கண் டாவென்னன் பாழிப் பகைதணித்த, மண்ணிவர் சீர்மன்னன் வாளெடு மாறன் மலயமென்னும், விண்ணிவர் குன்றத் தருவிசென் றுடியோர் வேங்கையின்கீழ்க், கண்ணிவர் காதற் பிடியொடு நின்ற கருங்களிறே" (பாண்டிக் கோவை.)

1. "அம்பல் பெருகி யலரான தல்லிதொறும், தும்பி முரலுஞ் சுரி கூந்தற் - கொம்பனைய, பண்ணாரு மென்சொல்லி பால்வந்து பல்காலும், அண்ணாவுன் செய்யு மருள்" (கிளவித்தெளிவு); "பலரா யெதிர்நின்று பாழிப் பட் டார்தங்கள் பைந்நிணம்வாய், புலரா வசும்புடை வேன்மன்னன் வேம் பொடு போந்தணிந்த, மலரார் மணிமுடி மான்றேர் வரோதயன் வஞ்சியன் னாட், கலராய் விளைகின்ற தாலண்ண னீசெய்த வாருளே", "பொருடா னெனநின்ற மானதன் பூலந்தைத் தோற்றுப்புல்லார், இருடா னடைகுன்ற மேறவென் றோன்கன்னி யீர்ம்பொழில்வாய், மருடா னெனவண்டு

"அணிகொணர்ந் தனரே யயலோ ரண்ணல்
துணிவுறு செய்தி யாதுகொல்
மணிபுரை கூந்தன் மடந்தைதன் வயினே" (87)
(களவியற். மேற்.)

என்பது அயல்வரைவுரைத்தது.

"பனிநாட் டாமரை போலப் பையத்
துனியா கின்ற னெஞ்ச மெல்லியல்
மின்சேர் நுண்ணிடை திறத்தினி
என்செயற் பால விலங்கிழை தாமே" (88)

என்பது தோழியைத் தலைமகன் வினயது.

"யானெவ னறிகோ வண்ணல் வானொடு
நானில முழுதும் பெறினும்
பேணு ரம்ம விவள்பூண் முலைக்கே" (89)
(களவியற். மேற்.)

என்பது யான் அறியேன், நீயுரை என்றது.

"தீயினும் வெய்ய வென்குவை யாயின்
யாவது மினிய கானம்
சேயுயர் சிலம்ப நின்னொடு செலினே" (90)
(களவியற். மேற்.)

என்பது சுரஞ்செல வாற்றும் நின்னோடு என்றது.

"தேரும் பிறவும் நீக்கி யில்லயல்
யாவரும் பயிலா வொருசிறை
வார்பூஞ் சிலம்ப வருதனின் கடனே" (91)

என்பது வருந்திறம் மொழிந்தது.

"ஊருஞ் சேரியு மலரெழ யாயும்
தானே யிருக்க தன்மனை யானே
திருந்துவேல் விடலையொடு கெழீஇ
அருஞ்சுரஞ் சேறல் புரிந்தன னினியே" (92)
(களவியற். மேற்.)

என்பது உடன்போக்கு நயப்பித்தது.

"கானங் கார்பெயத் தண்ணென் றன்றே
வான மதியு நாணிலா வுதவும்
அன்னை துயராமு நின்னையர் வெகுளியும்
தணிக்குவன் மன்னோ யானே
மணிக்குழன் மாதரைக் காணயான் மறுத்தே" (93)

இதுவும் அது.

---

பாடுந்தண் டாரண்ணல் வந்துசெய்த, அருடா னலராய் விளைகின்ற தான் மற்றிவ் வாயிழைக்கே" (பாண்டிக்கோவை); "அலராய் விளைகின்ற தம்பல்கைம் மிக்கைய மெய்யருளே" (சிற். 180.)

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே"

(நறுந். கசக)

என்பது தலைமகள் உடன்செலநேர்ந்த பாவக்கிளவி.

களவு முற்றும். (உ0)

---

## கற்பு

உக. [1]முக்கட் கூட்ட முதலா நான்கும்
தொக்கிய லொழுக்கங் கற்பெனத் தோன்றும்.

என்பது கற்பு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அறத்தொடு நிலையும், உடன்செலவும், [2]சேயிடைப் பிரிவும், ஆயிடைப் பிரிவும் எனப்பட்ட நான்கும் தொக்க ஒழுக்கம் முக்கட் கூட்டமுடைய கற்பென்று சிறப்பிக்கப்படும். எ - று. (உக)

### க. அறத்தொடு நிலை

உஉ. மறுதலை யில்லா மாண்பியல் கிளவியிற்
றலைவி தோழிக் கறத்தொடு நிற்றலும்
செவிலி புகழ்தலுந் தோழி யுணர்த்தலும்
முதுவாய்க் கட்டுவி முருகென மொழிதலும்
அதுகுறித் தினைதலு மறல வினவலும்
பொய்யென மொழிதலும்பொன்றத் துணிதலும்
கையன் றென்றலுங் காரிகை நேர்தலும்
பாங்கி வெறிக்கட் படர்க்கைமுன் னிலையும்
ஈன்றோ டன்வயிற் கைத்தா யியம்பலும்
வரைவெதிர் மறுத்தலு மையலுந் தெளிதலும்
கிளந்த தம்வயி னற்றாய் கிளத்தலும் [மனார்.
இளையோர்க் கெதிர்தலும் வெளிப்படை யென்

என்பது அறத்தொடுநிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. களவியற். 43, மேற்.
2. 'வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின்பங்களின்

(இ - ள்.) [1]கற்பினோடும் காவலோடும் நலத்தினோடும் குலத்தினோடும் உலகினோடும் மாறுகோள் இல்லா மொழியால் தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிற்றல் முதலாக வரைவெதிர் கோடல் ஈறுகச் சொல்லப்பட்ட இவை அறத்தொடு நிலையா மென்று சொல்லுவர் புலவர். எ - று.

"[2]தோழி வாழி மேனா ளொருவன்
ஆழ்கய மருங்கி னழுந்தத்
தாழ்பெருந் தடக்கையின் வாங்கினன் றகைத்தே" (94)
(களவியற். மேற்.)

என்பது தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

" நுணுகிய நுசுப்பி னகன்றேந் தல்குற்
பணைமுலைக் கருங்கட் செவ்வாய்ப் பேதை
திருநலம் பெறாஉம் பெருந்தகை
ஒருநல் லின்னுயி ராயினள் பெரிதே" (95)

என்பது செவிலி தலைமகளை நாட்கோலஞ் செய்தது.

"யாண்டுளன் கொல்லோ தானே மாண்குழை
மொய்யிருங் கூந்தன் முடியாப் பருவத்துப்

---

பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்' (நூறள், கற்பியல், அவதாரிகை.)

1. "தோழிக் குரியவை கோடாய் தேளத்து, மாறுகோ ளில்லா மொழி யுமா ருளவே" (இறை. 14) என்பதனையும், 'எற்றினொடு மாறு கொள்ளாமை யோ வெனின், தாயறிவினொடு மாறுகொள்ளாமையும், தலைமகன் பெருமை யொடு மாறுகொள்ளாமையும், தலைமகளது கற்பினொடு மாறுகொள்ளாமை யும், தோழி தனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணினொடு மாறு கொள்ளாமையும், உலகினொடு மாறுகொள்ளாமையுமெனக் கொள்க' என்னும் அதன் உரையையும் பார்க்க.

2. "ஓங்கிய வெண்குடைப் பைங்கழற் செங்கோ லுசிதன்வையை, வீங்கிய தண்புன லாடி விளையாட் டயர்பொழுதிற், றேங்கிய தெண்டிரை வாங்க வொழுகிநின் சேயிழையாள், நீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே", "சின்னாண் மறந்திலம் யாமுந்தென் சேவூர்ச் செரு மலைந்த, மன்னன் செலச்செற்ற வானவன் மாறன்வை யைத்துறைவாய்ப், பொன்னார் புனலெம்மை வாங்கும் பொழுதங்கொர் பூங்கணைவேள், அன்னா னொருவ னணைந்தெமக் குச்செய்த வாரருளே" (பாண்டிக்கோவை); "ஆடுந் துறையி லருவினை யேன்கை யகன்றறிவை, ஓடும் புனலி லொழுகிய நாளெம் மழுகுரற்கேட், டேடொன்று பூந்தொடை யேந்தன்முன் னீந்தி யெடுத் தணைத்து, நீடுந் தடங்கரை நில்லுமென் றானெம்மை நேரிழையே" (அம்பி காபதி கோவை, 356.)

பெறுக நின்னை யானென
நறுநுத னீவிப் படர்தந் தோனே'' (96)

என்பது [1]செவிலி தலைமகளைப் புனைந்து 'யாரோ இவளை எய்துதற் குரிய பெருந்தகை' எனத் தோழி அறத்தொடு நின்றது.

"[2]எய்யா வுள்ளமோ டன்னையல் வாழி
மைதபு கழங்கிற் பட்டது முளதே, யதுதான்
மையில் காட்சியின் வயங்குயிர் மயங்கிய
தெய்வ வாணுரு வாகுத றெளிவே'' (97)

(களவியற். மேற்.)

என்பது தலைமகள் வேறுபாடு கண்டு செவிலி வினவக் கட்டுவிச்சி சொல்லியது.

"[3]அறியா னன்னை வெறிமுறை தொடங்கும்
எவனு கியரோ நெஞ்சே பிழையாக்
குலஞ்சா லொழுக்கமு நாணும்
நலஞ்சால் கற்பு மில்லுழி யெமக்கே'' (98)

என்பது செவிலி வெறி கால்கொள்ளத் தலைமகள் இரங்கியது.

"வீயா மரபி னொருதிற னுடி
ஆவயி னுரைப்பி னெவனோ தோழி
[4]நாம முந்நீர் போலக்
காம வெந்நோய் கையிகந் தன்றே'' (99)

என்பது தலைமகள் ஆற்றாமை யுணர்ந்த தோழி அறத்தொடு நிற்றல் தக்கதென்றது.

"அதுவு மாகுவ துண்டோ கதுமென
வஞ்சி நுண்ணிடை மடந்தைநின்
நெஞ்சங் காணிய பொய்ம்மொழிந் தனனே'' (100)

என்பது ஆற்றுளாய் நின்ற தலைமகளைத் தோழி பொய்ம்மொழிந் தனனென ஆற்றுவித்தது.

---

1. "தலைமகளை ஒருநாட் கோலஞ்செய்து அடியிற் கொண்டு முடிகாறும் நோக்கி, 'இவட்குத் தக்கான் யாவனுவன் கொல்லோ' என்று ஆராய்ந்த செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது'' (திணை மாலை நூற்றைம்பது, 62, கருத்து); குறுந். ௩௭௯.

2. ஐங்குறு. ௨௪௫, ௨௪௭, ௨௪௮, ௨௪௯, ௨௫௦.

3. 'அறியா மையின் வெறியென மயங்கி, அன்னையு மருந்துய ருழந் தன ளதனல், எய்யாது விடுதலோ கொடிதே'' (ஐங். ௨௪௨.)

4. குறள், 1137.

“ [1]அன்னைக் கிம்மறை யுணர்த்தி நிலமிசை
மன்னிய வாழ்க்கைய மாதலி னுணர்த்தா
தின்னுயி ரின்னே விடுகேன்
பொன்னேர் மேனி மின்னிழை யானே” (101)

என்பது தலைமகள் அறத்தொடுநிலை மறுத்தது.

“ [2]அன்பு மன்றே கற்பு மன்றே
நன்றொடு வந்த வொழுக்கமு மன்றே
ஆற்றுதல் புரியி னல்லது
கோற்றொடி மாதர் கூறிய திறமே” (102)

என்பது தோழி அறத்தொடுநிலை நயப்பிக்கக் கூறியது.

“ [3]ஆற்றேன் றோழி யானே யவர்மலைப்
பூத்தாழ் பொழிலகந் துழைஇய
காற்றே யானுந் தீண்டலங் கடையே” (103)

என்பது தலைமகள் அறத்தொடுநிலை நயந்தது.

“ [4]தண்ணென் சாயலிவ ளுண்ணோய் தணிய
எண்ணினை கொடுத்தி யாயின்
அண்ண லாகமு முண்ணுமோ பலியே” (104)

(களவியற். மேற்.)

என்பது வெறியாட்டின்கண் வேலன்மேல் வைத்துத் தோழி அறத்தொடு நின்றது.

---

1. (அகநா. ௫௨ : 12 - 5); “பூணொன்று மென்முலைப் பொற்றொடி யாய்நிறம் போர்த்தபைம்பொன், காணுந் தொறுங்கலு ழன்னைக்கு நின்ன ருங் கற்புடனே, சேணின் றுயர்ந்த மரபுக் கடாத செயலையின்று, நாணின்றி நின்று மொழிவதின் மாய்கவென் னல்லுயிரே” (அம்பிகாபதிகோவை, 350.)

2. “வில்லார் நுதலும் விழியும் பசப்பும் வெறிக்குமுன்னே, சொல்லா தொழியினின் றன்னையு நாடுந் துடிமருங்குல், நல்லாய் குலனு நலனுமெய்ந் நாணு நயந்தகற்பும், எல்லா மழியுமென் றேயினி மேலிதற் கென்செய் வதே” (அம்பிகாபதிகோவை, 351.)

3. நற். ௨௩௬.

4. (குறுந். ௩௬௨); “கோல மறியின் குருதியாற் கொய்ம்மலரால், வேல னயரும் வெறியாட்டுச் - சால, மடவார் மயின்முருக னன்றியே யண்ணல், தடமார்பு முண்ணுமோ தான்” (கிளவித்தெளிவு); “வண்டா ரிரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்த, விண்டா ருடலின் மறியறுத் தூட்டி வெறியயர்ந்து, தண்டார் முருகற் றருகின்ற வேலதண்

"1முளையெயிறு நிரம்பா விளமைப் பருவத்
தொளிதிக ழொருவ னீட்டிய
தளையவிழ் கண்ணி தாங்கின ளுவந்தே" (105)

(களவியற். 49, மேற்.)

என்பது செவிலி வினவத் தோழி அறத்தொடு நின்றது.

"2கயஞ்சான் மறுகுழி யழுந்தின மாக
முயங்கின னெடுத்த வண்ணலை
வயங்கிணர்க் கோதை மறவலள் பெரிதே" (106)

இதுவும் அது.

---

பூஞ்சிலம்பன், ஒண்டா ரகலமு முண்ணுங் கொலோநின் னுறுபலியே" (பாண்டிக்கோவை.)

1. 'எம் கூழைக்கற்றைக் குழவிப் பிராயத்து மாழைகலந்த ஏழை நீர்மையாரொடு நாட்கோலஞ் செய்து விளையாடி வம்மினென்று போக்கினாய்; போக்கினவழி, யாம்போய் ஒருவெண்மணல் பரந்த தண்மலர்ப் பொழிலிடை விளையாடி நின்றேமாக, ஒரு தோன்றல் ஒரு சுனைக்குவளைப்பூக் கொண்டு அவ்வழியே போந்தான்; போதர நின்மகள் அவனை நோக்கி அப்பூவினை என் பாவைக்கு அணியத் தம்மினென்றாள்; அவனும் பிறிதியாதும் சிந்தியாது கொடுத்து நீங்கினான்; இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததென்னும்' (இறை. 14, உரை); "கந்தார் களிறு கடாய்ச்செந் நிலத்தைக் கறுத்தெதிர்ந்து, வந்தா ரவியவை வேல்கொண்ட கோன்கன்னி வார்துறைவாய்ப், பந்தார் விரலிதன் பாவைக்கு வேண்டப்பைம் போதொருவர், தந்தார் தரவவை கொண்டணிந் தாளித் தடங்கண்ணியே", "திண்போ ரரசரைச் சேவூ ரழிவித்த தென்னனன்னீர், மண்போ யழிக்குஞ்செங் கோன்மன்னன் வையைநன் னுடையாள், கண்போற் குவளையம் போதங்கொர் காளையைக் கண்டிரப்பத், தண்போ தவன்கொடுத் தானணிந் தாளித் தடங்கண்ணியே" (பாண்டிக்கோவை); "சோலைத் திருமுரு கன்னா னொருவன் றொடிமலர்க் கை, நீலத்தின் மேல்விழி செய்தல்வைத் தாளந் நினைவறிந்து, கோலத் திருவனை யீர்வம்மி னீரது கொண்மினென்ன, மாலைக் கருங்குழல் வல்லிதன் பாவைக்கு வாங்கினளே" (அம்பிகாபதிகோவை, 355.)

2. "ஓங்கிய வெண்குடைப் பைங்கழற் செங்கோ லுசிதன்வையை, வீங்கிய தண்புன லாடி விளையாட் டயர்பொழுதிற், றேங்கிய தெண்டிரை வாங்க வொழுகிநின் சேயிழையாள், நீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே", "சின்னாண் மறந்திலம் யாமுந்தென் சேவூர்ச் செருவழித்த, மன்னாள் செலச்செற்ற வானவன் மாறன்வை யைத்துறைவாய்ப், பொன்னார் புனலெம்மை வாங்கும் பொழுதங்கொர் பூங்கணைவேள், அன்னா னொருவ னணைந்தெமக் குச்செய்த வாரருளே" (பாண்டிக்கோவை.)

"[1]முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே" (107)
(தொல். அகத். 3, ந; யா. வி. 32, மேற்.)

என்பது செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

"[2]இளைய எம்ம தானே கிளையும்
வளைபயில் பொருதிரைக் கடல்கண் டனைத்தே
புள்ளு நாளும் பிறவும்
தெள்ளிதி னுணர்தல் பெரியோர்க்குக் கடனே" (108)

என்பது வரைவு மறுத்தது.

"[3]இளிவரு சிந்தையன் மன்னே நம்வயின்
ஒளிதிகழ் பெருந்தழை யீந்த
அளிதிகழ் நெஞ்சி னருளி னோனே" (109)

என்பது வரைவு மறுத்தவழித் தலைமகள் ஆற்றாளாயிற்று.

"வருந்தினை வாழி தோழி நந்தமர்
திருந்திலை நெடுவே லண்ணலை
விரும்பினர் மாதோ வொழிகநின் மெலிவே" (110)

என்பது வரைவுணர்ந்த தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

"கலந்தாங் கிளமுலைக் கற்புடை மடந்தையைக்
குலஞ்சா லொழுக்க நோக்கி
நலஞ்சா லண்ணற்கு நேர்வது நடையே" (111)
(களவியற். 49, மேற்.)

என்பது நற்றாய் தமர்க்கு அறத்தொடு நின்றது.

"[4]வான்றோய் தொல்குடி மரபு மவ்வழிச்
சான்றீ ருமது வரவு நோக்கி

---

1. "திருந்தா மொழியுந் திரளா முலையுந் தரளமென்னும், முருந்தாகு மென்னகை மூரலுந் துய்ய முருகவிழ்பூங், கருந்தாழ் குழலுமென் கைவந்த தில்லை கன்குழையாய், அருந்தா வமுதமன் றோஎறி வானின்னை யன்ன ளின்றே" (அம்பிகாபதிகோவை, 359.)

2. 'பரியஞ் சிறிதென்றானும் இளையளாலோ வென்றானும், நாளும் புள்ளும் திருத்தி வாரீரோ வென்றானும் அங்ஙனம் மறுத்தாரென்பதனைத் தலைமகள் கேட்ட ஞான்றும் ஆற்றாளாம்' (இறை. 29, உரை.)

3. 'எம்பெருமான் ஒருவர்க்கு ஒருகுறை முடிப்பினல்லது ஒருவரை ஒரு குறைவேண்டுந் தன்மையனல்லன்; அல்லாதான் இக்குறைவேண்டியது என்கட்கிடந்த அருளாகாதே? இவற்கு இவ்விளிவரவு ஆக்கினேன் பாவியேனெனவும்......தலைமகள் வேறுபடும்' (இறை. 29, உரை.)

4. ஒப்பு: "சான்றோர் வருந்திய" (தொல். களவு. 23, பொருள், 20, ந.; இறை. 28; களவியற். 49, மேற்); "சான்றோர் வரவும்" (பாண்டிக்.)



MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

நேர்ந்தன மல்லதிவ் வுலகம்
மூன்றுடன் பெறினு முடிவதோ வன்றே" (112)

என்பது வரைவெதிர் கொண்டது. (உஉ)

## உ. உடன் செலவு

உ௩. கையடை மகிழ்ச்சி கண்டோர் கூற்றே
நைவுடைச் செவிலி நற்றாய் மொழியே
செல்சுரத் திரங்கல் கண்டோர் தெளித்தல்
இல்வயிற் பெயர்த்த லிளையோர் செலவே
அறிந்தனன் மறைத லயலோர் மொழிதல்
பெயர்ந்தனன் வருதல் பெருங்கிளை மகிழ்வே
தாயர் கூற்றே தலைமகண் மொழியோ
டாயின பிறவு முடன்செல வாகும்.

என்பது உடன்செலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கையடை முதலாகத் தலைமகள் கூற்று ஈறாகச் சொல்லப்பட்டன வரைவு மறுத்துழியாகிய உடன்செலவாம். எ - று.

" இவளே நின்னல திலளே யாயும்
குவளை யுண்க ணிவளல திலளே
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே " (113)
(தொல். அகத். 39, ந. மேற்; இறை. 23, மேற்; நம்பி. 182, மேற்.)

என்பது கையடை.

" மெல்ல மெல்ல*நின் னல்லடி யாற்றி
வருந்தா தேகுமதி மடவோய்
இருந்தண் பொழிலயாஞ் செல்லு மாறே " (114)
(களவியற். 51, மேற்.)

என்பது தலைமகன் மகிழ்ச்சிக் கிளவி.

" உவந்தனை காண்டியோ நெஞ்சே மேனாள்
இவர்ந்தனை சென்று மெய்தாக்
கருங்குழன் மாதர் மயிலியற் கவினே " (115)

இதுவுமது.

" [1]புதுப்பூங் கோதை புனைந்தெழி லாகமும்

1. ஒப்பு: "கானப்பாதிரி" (அகநா. உசுக); "காண்பா னவாவினுற்" (தொல். அகத். 40, ந. மேற்; செய். 155, பேர். மேற்.)

(பி - ம்.) *நின்னடை.

கதுப்பு நீவிநின் சிறுபுறங் காண்கென
முன்செல விடுப்ப நாணிப் பின்பின்
தாழ்ந்தன ளொதுங்க யானுந் தாழ்தலின்
வைகின மாதோ நெஞ்சே
பைவிரி யல்குலொடு பழுவத் தானே" (116)

இதுவுமது.

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே" (குறுந். எ)

என்பது சுரத்தெதிர்ப்பட்டார் சொல்லியது.

"[1]செங்கதிர்ச் செல்வனு மத்தஞ் சேர்ந்தனன்
கொங்கிவர் குழலோ டிவ்வழித்
தங்கினை சென்மோ தகைவெய் யோனே" (117)
(களவியற். 51, மேற்.)

இதுவுமது.

"[2]நெடுந்தேர்க் காளையொ டோராங் கேகிக்
கடுஞ்சுரந் நீதின் றிறந்தன ளவளெனக்
கூறுமி னந்தணிர் தொழுதன னும்மே
தேய்வுறு மதியொடு கலங்கும்
யாயு மாயமு மிருந்துயர் கெடவே" (118)

என்பது எதிர்கண்டார்க்குத் தலைமகள் சொல்லியது.

"வண்டார் கோதை வரிவளைத் தோளியைப்
பண்டா டிடங்களுட் காணு தின்னும்
நில்லா வுடம்பொடு கெழீஇ
நின்றனை கொல்லோ வாழிய நெஞ்சே" (119)

என்பது தலைமகளைக் காணாது செவிலி இரங்கியது.

"வலியை மன்ற நீயே பொலிவளைக்
காதற் றோழி கையகன் றொழியவும்
பேதற விலையா லுயிரொடும் புணர்ந்தே" (120)

என்பது தோழியை நோக்கிச் செவிலி சொல்லியது.

---

1. ஒ. "எம்மூ ரல்லது", "நல்லோண் மெல்லடி" (தொல். அகத். 40, ந. மேற்; களவியற். 51, மேற்.)

2. ஒ. "சேட்புல முன்னிய", "கடுங்கட் காளையொடு" (ஐங். ௩௮௪-௫)

"[1]சூன்முதிர் கொண்மூ மின்னுபு பொழியக்
கானங் கடுமை நீங்குக
மானுண் கண்ணி போகிய சுரனே" (121)

என்பது தலைமகள் செலவுணர்ந்து நற்றாய் இரங்கியது.

"மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபி னின்கிளை வளர்ப்பப்
பச்சூன் பெய்த பசுந்தினைப் புன்கம்
பொலம்புனை கலத்திற் றருகுவன் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே" (ஐங். ௩௯௧)

இதுவுமது.

"நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
இலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே" (குறுந். ௧௩௦)

என்பது நற்றாய்க்குச் சொல்லிச் செவிலி பின் சென்றது.

"[2]வெய்யோன் சாபத் தெய்கணை குளிப்ப
வீழ்ந்தது மன்றவிக் களிறே தாழ்ந்த
இடுமுத் தணிவடஞ் சுடரத்
தொடியோ ளொதுங்கிய சூழன்மன் னிதுவே" (122)

என்பது சுரத்திடைச் சென்ற செவிலி இரங்கியது.

"காய்ந்திலை மறவை மன்னோ வேந்திழை
அழல்கெழு வெஞ்சுரஞ் செலவும்
எழில்கெழு பாவை யேந்திய குரவே" (123)

இதுவுமது.

"[3]ஒண்டிற லண்ணலொ டொளியிழை மடந்தையை
நுண்புரி மார்பி னந்தணிர்
கண்டனிர் பிறவோ கடுஞ்சுரஞ் செலவே" (124)

என்பது செவிலி இடைச்சுரத்து வருவாரை வினவிற்று.

---

1. ஒப்பு : மள்ளர் கொட்டின்" (ஐங்: ௩௭௧); "ஞாயிறு காணாது" (குறுந். ௩௭௮.)

2. "செறிகழல்", "கொடுவிற்படை" (இறை. 23, மேற்.)

3. ஐங். ௩௮௭ : 1 - 3.

"[1]மடவரன் மாதர்க்கு வருந்தா தீமோ
கடல்வயிறு பயந்த நித்திலம்
உடையோர்க் காத லுலகியல் வழக்கே" (125)

என்பது செவிலியை இடைச்சுரத்துக் கண்டோர் தெருட்டியது.

"என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொ
டழுங்கன் மூதா ரழுங்கச்
செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே" (ஐங். ௩௭௨)

என்பது செவிலி மனைவயிற் பெயர்ந்தது.

"நாண்கால் வாங்கிய சிலையர் சீற்றமொ
டீங்கிவ டன்னையர் வருகுவர்
யாங்கா குவரிவர் வளையாக் காலே" (126)

என்பது தலைமகள் தமர் பின்செல்லக் கண்டார் சொல்லியது.

"[2]அயிலே ரம்பினர் நின்னையர் கயில்வளை
பயில்பூஞ் சுனையி னீழல்
மயிலேர் சாயன் மறைகுவன் சிறிதே" (127)

என்பது தலைமகள் தமராதல் அறிந்து தலைமகன் மறைந்தது.

"வரிசிலை யிடவயி னேந்திக் கணைதெரிந்
தெரியுமிழ் கண்ணின ரிவரே ஞாங்கர்
ஆயிழை மடந்தை தமரென மறைந்த
சேயுயர் செல்வனுஞ் சினவு மாயிடை
அறனன் றிதுவென வுரைஇத்
திறனறி மாந்தரைத் தெருட்டுது நாமே" (128)

என்பது இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

"இவளே, நலமேம் பட்ட வன்பின ளிவனே
குலமேம் பட்ட சான்றோர் மகனே
இருவர் தன்மையு நோக்கிப்
பருவர லெய்தாது கொடுத்தலோ பண்பே" (129)

இதுவுமது.

"பெரும்பட ருழக்குங் கிளைமகிழ் தூங்கத்
திருந்தெழி லல்கு லன்பொடு
வியன்பெருந் தொல்பதிப் புகுகநாம் விரைந்தே" (130)

என்பது பெயர்ந்தனர் வருதல்.

---

1. ஒ. "வெந்நீ ரருஞ்சுரம்", "நெருங்கடல்" (இறை. 23, மேற்.); கலி. ௯ : 15 - 7; சீவக. 563; பெருங். க. 47 : 253 - 5.

2. நற். ௩௬௨; ஐங். ௩௧௨.

“ வளங்கெழு கானம் வருகுவ ரின்றென
விளம்புமின் விரைந்தனிர் செலினே
உளங்கெழு காத லுயிரன் னோர்க்கே ” (131)

என்பது ஆயத்தார்க்குக் கூறுமினென்றது.

“ மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரு மென்ப தடமென் றோளி
அஞ்சின ளஞ்சின ளொதுங்கிப்
பஞ்சி மெல்லடி பரல்வடுக் கொளவே ” (132)

(தோல். அகத். 42, மேற்.)

என்பது வரவுணர்ந்து கிளை மகிழ்ந்தது.

“ [1]முதுவாய் வேல மொழிந்திசி னெமக்கே
மதுவார் கூந்தன் மடந்தையைக்
கதிர்வே லண்ணல் கருதிய திறனே ” (133)

என்பது வேலனைச் செவிலித்தாய் வினயது.

“ துறந்ததற் கொண்டுந் துயரடச் சாஅய்
அறம்புலந்து பழிக்கு மருநவை யாட்டி
எவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மகளே
வெந்திறல் வென்வேல் விடலைமுந் துறவே ”

(ஐங். ௫௧௫)

என்பது செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

“ அறனன் றம்ம தானே நிறையழிந்
தாழ்துய ரவல முழக்கும்
காதற் றாய்க்குக் காட்டினை வம்மே ” (134)

என்பது தலைமகற்குத் தலைமகள் நற்றாய் சொல்லியது.

“ நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணங் கழிக
என்றுநாஞ் சொல்லி னெவனோ தோழி
மையற விளங்குங் கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே ” (ஐங். ௫௧௧)

என்பது தலைமகணற்றாய் செவிலிக்குச் சொல்லியது.

“ புதுவது புனைந்த வதுவைக் கோலமொடு
முதுவாய்ப் பெண்டிர் பராயின ரேத்தக்
கடிமனை யெம்மொடு புகுந்தோய் மேனாள்

---

1. ஓ. “அருஞ்சுர மிறந்த” (அகநா. ௧௧௫.)

அறிதலு மறிதியோ மடந்தை
கறிவளர் சாரற் குறிவயி னோனே" (135)

என்பது தலைமகன் தலைமகட்குச் சொல்லியது. (உ௩)

## ௩. சேயிடைப் பிரிவு

உ௪. பிரிவகை யுணர்த்தலும் பாங்கி கூற
உரிதினி னழுங்கலு மழுங்காக் காலை
அறிகுவ னென்றலு மறியக் கூறலும்
நறுநுத லினைதலு நயவரக் கூறலும்
தெரியிழை நோதலுஞ் செலவுடன் மயங்கலும்
வந்தது பொழுதென வருந்தலுந் தோழி
நொந்தன ளுரைப்பவு நோவாள் கூறலும்
ஆற்று வித்தலு மாயிடை வருவோன்
மேனவுஞ் சேயிடைப் பிரிவெனக் கொளலே.

என்பது சேயிடைப் பிரிவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பிரிவுணர்த்துதல் முதலாகப் பெயர்ந்தோன் கூற்று ஈறுகச் சொல்லப்பட்டன சேயிடைப் பிரிவா மென்றவாறு.

"அறனு மீகையு மன்புங் கிளையும்
புகழும் போகமுந் தருதலிற் புறம்பெயர்ந்து
தருவது துணிந்தனம் பெரிதே
விரிபூங் கோதை விளங்கிழை பொருளே" (136)

என்பது தலைமகன் தோழிக்குப் பிரிவு உணர்த்தியது.

"எவன்பல மொழிகோ யானே யன்ப
அகன்றிவட் பிரிந்த வந்நிலை
நிகழ்ந்தன் றம்ம நீங்குத லுயிரே" (137)

என்பது தோழி தலைமகள்நிலைமை கூறிச் செலவழுங்குவித்தது.

"யானென்று கூறுவ லைய வானம்
நிலம்பக வறந்த புலம்புறு சேணிடைச்
செய்வினை நயந்தனி ராயி னவ்வினைக்
கம்மா வரிவைபு மாற்றுமோ நடையே" (138)

இதுவுமது.

"ஆறுசெல் வருத்தஞ் சீறடி சிவப்பவும்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவும்
தான்வர றுணிந்த விவளினு மிவளொடு
வேய்பயி லழுவ முவக்குமென்

பேதை நெஞ்சம் பெருந்தகை யுடைத்தே" (139)
(தொல். அகத். 41, மேற்; நம்பி. 182, மேற்.)

என்பது தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங் குவித்தது.

" மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே" (குறுந். எக)

இதுவுமது.

" குறித்ததை யிதுவென நெறிப்படக் கூறி
அவணிலை யறிந்தியான் மொழிந்தபின் வழாஅது
பொன்புனை நெடுந்தேர் பூண்கநின் மாவே" (140)

என்பது அழுங்காது செலவு குறித்த தலைமகனுக்குத் தோழி சொல்லியது.

" அறியேன் றோழியவர் நெஞ்சுகுறித் ததுவே
மறிபுணர் மான்பிணை கலையொடு மருவப்
பரிவுறு முகத்த ராகி
ஒருமுறை யன்றி நோக்கினர் பெரிதே" (141)

என்பது தோழி தலைமகட்குக் குறிப்பினாற் பிரிவுணர்த்தியது.

" வரம்பில் கேள்விப் பெரும்பெயர்ப் பனுவல்
பதினெண் மொழியிற் பயன்கொள விரிக்கும்
மதிபுரை கேள்வி மதியோர் நசைஇப்
பிரிவர்நங் காதலர் பிறபுலம் படர்ந்தே" (142)

என்பது [1]கல்வி விளக்குவான் பிரிவரென வெளிப்பட உணர்த்தியது.

" மாயிரு ஞாலத் துயிர்தலை யளிக்கும்
காவல் வேண்டினர் காதலர்
ஆயிழை மடந்தை யாற்றுதல் கடனே" (143)

என்பது காத்தற்குப் பிரிவரென உணர்த்தியது.

---

1. 'ஓதற்குப் பிரியு மென்பது கற்பான் பிரியுமென்பதன்று; பண்டே குரவர்களாற் கற்பிக்கப்பட்டுக் கற்றான் அறம்பொருளின்பம்வீடுபேறுகள் நுதலிய நூல்களெல்லாம்; இனிப் பரதேசங்களிலும் அவை வல்லார் உளரெனிற் காண்பலென்றும், வல்லார்கள் உள்வழிச் சென்று தன்ஞானம் மேற்படுத்து அவர்கள் ஞானங்கீழ்ப்படுத்தற்கும் பிரியுமெனக் கொள்க. (இறை. 35, உரை.)

"மீளா வென்றி யிருபெரு வேந்தரை
வாளம ரழுவம் பெயர்க்கும்
ஆள்வினைக் ககல்வர்நம் மன்பி னோரே" (144)

என்பது பகைதணிப்பான் பிரிவரென உணர்த்தியது.

"நாளு நாளு மாள்வினை யழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனு
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துயரொழி தோழி நீயே"
(சிற்றட்டகம்; நம்பி. 251, மேற்.)

என்பது பொருள்வயிற் பிரிவரென உணர்த்தியது.

[1]"சேறல ரென்ப துளதெனி னுரைமதி
மாறினர் வல்வர வுரைப்பின்
ஊறின் றிவ்வழி வாழ்வோர்க் குரையே" (145)

என்பது பிரிவரென்பது கேட்ட தலைமகள் ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

"நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரோ சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழும்
தேமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே"
(குறுந். உஉ)

என்பது ஆற்றாளாய தலைமகட்குத் தோழி பிரிவு நயப்பச் சொல்லியது.

"நல்லிசை நிறுத்தல் வேண்டித் துணைபிரிந்து
செல்வது காதலர் கடனே சென்றென
ஒல்கிய வுள்ளமொடு புலவா
தில்லிருந் தாற்றுதல் கற்பின தியல்பே" (146)

இதுவுமது.

"எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையனென் றோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே"
(குறுந். ந௲கரு)

என்பது தலைமகள் பிரிவுடன்பட்டது.

"அருஞ்சுரக் கவலையும் பிரிந்தென வருஉம்
பெருந்தண் வாடையு நினைஇ
வருந்துக மெம்மை மறவா தீமே" (147)

என்பது பிரிவுடன்பட்ட தலைமகள் தலைமகற்குச் சொல்லியது.

---

1. ஒப்பு. குறள், 1151.

"காலிய னெடுந்தேர்க் கடும்பரி கடைஇப்
பாலைக் கானம் போகி வினைமுடித்
தின்னே வருக நாமே
பொன்னேர் மேனி புலம்புதவப் பெரிதே" (148)

என்பது பிரிந்து செல்லுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

1"ஆண்டவ ணொழிந்தன்று மிலையே யீண்டிவண்
எழுவினி வாழியென் னெஞ்சே பணிமொழி
மையே ருண்கண் கலுழச்
செய்வது துணிந்த பொருள்வயி னோனே" (149)

என்பது தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நினைந்த நெஞ்சினைத் தெளித்துச் சென்றது.

2"செல்லா ரவரென யானிகழ்ந் தனனே
ஒல்லா ளிவளென வொழிந்தனர்
நல்லெழி லுண்க ணலியுமென் னெஞ்சே' (150)

என்பது தலைமகன் அறியாமற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாது சொல்லியது.

3"பிடவுங் கோடலும் விரைஇ மடவ
தாரின் கொன்றையொடு தோன்றி தோன்றக்
கார்கொண் டன்றே கானம்
நீர்கொண் டனவாற் றோழியென் கண்ணே" (151)

என்பது பருவவரவு கண்டு ஆற்றாளாயது.

"அம்ம வாழி தோழி யவர்போல்
நம்முடை வாழ்க்கை மறந்தன்று கொல்லோ
மனையெறி யுலக்கையிற் றினைக்கிளி கடியும்
கான நாடன் பிரிந்தெனத்
தானும் பிரிந்தன்றென் மாமைக் கவினே" (152)

இதுவுமது.

"சிறுபுன் மாலை சிறுபுன் மாலை
தீப்பனி யன்ன தண்வளி யசைஇச்
செக்கர்க் கொண்ட சிறுபுன் மாலை
கைகலும் வருதியா லெமக்கே
என்றுஞ்செல் லாயவர் குன்றுகெழு நாட்டே" (153)
(தொல். களவு. 21, ந. மேற்.)

என்பது தலைமகளாற்றாமைக்குத் தோழி ஆற்றாளாயது.

---

1. ஒ. "அன்றவ ணொழிந்தன்று மிலையே" (அகநா. கக.)
2. குறுந். சகூ. 3. ஐந். எழு. 15.

"நிரையிர் செல்லு மோவென நேர்ந்து
புலைய னெறிந்த பூசற் றண்ணுமை
[1]ஏவ விளையர் தாய்வயிறு கரிக்கும்
இன்னா வருஞ்சுர மென்ப
என்னோ தோழியவர் சென்ற வாறே" (154)

என்பது ஆற்றுளாய தோழிக்கு ஆற்றுவலென்பது படச் சொல்லி யது.

"கவ்வையம் பெரும்பழி தூற்ற நலனழிந்து
பைதலஞ் சிறுநுதல் பசலை பாய
நம்மிதற் படுத்த வவரினு மவர்நாட்டுக்
குன்றங் கொடியகொ ரூழி
ஒன்றுந் தோன்றா மழைமறைந் தனவே" (155)
(தொல். களவு. 23, ந. மேற்.)

என்பது தோழி ஆற்றுவிப்பான் தலைமகனை இயற்பழித்தது.

"தொடிநடந் திழியச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறின வாயினுங் கொடுமை
நல்வரை நாடர்க் கில்லை தோழியென்
நெஞ்சிற் பிரிந்தது மிலரேதம்
குன்ற நோக்கங் கடிந்தது மிலரே" (156)
(தொல். களவு. 20, ந; மெய்ப். 22, பேர்.)

என்பது தலைமகள் அதனுக்கு ஆற்றுளாய் மொழிந்தது.

"நிறைநீர் மாமழை பொறைமெலிந் துகுத்தென
வம்பத் தண்பெய லுணராள் கண்டே
காரென வருந்து மிவளினு மிவள்வாய்த்
திருநகை யெயிற்றி னிணர்முகை யரும்பிய
பெருந்தண் முல்லையு முடையவா னகையே" (157)

என்பது பருவம் அன்றெனஆற்றுவித்தது.

"காரே செய்த கானங் கவினபெயற்
கோப மூர்ந்த கொங்குசேர் நெடுநெறி
உள்ளினு முள்ள முவப்பப்
புள்ளெழ வந்தன்று நெடுந்தகை தேரே" (158)

என்பது தேர்வரவு கூறி ஆற்றுவித்தது.

"இல்லமொடு மிடைந்த கொல்லை முல்லைப்
பல்லான் கோவலர் பையு ளாம்பல்
மயங்கிருண் மாலை கேட்டொறும்
கலங்குங்கொ லளியணங் காத லோளே" (159)

என்பது வினைமுடித்து மீள்வான் நெஞ்சிற்குச் சொல்லியது.

---

1. இவ்வடி பலநூலுரைகளில் ஒருமைபன்மை மயக்கத்துக்கு மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

"வாரா ராயினர் காத லோரென
நீர்வார் கண்ணினள் புலம்பக்
காரார் மாமுகில் கடுஞ்செல வொழியே" (160)

என்பது முகிலுக்குச் சொல்லியது.

"ஊர்க பாக தேரே கார்கண்டு
பாசறை நீடினர் காத லோரென
நப்புலந் துறைவோள் காண
இப்பொழு தவள்வயிற் புகுக நாமே" (161)

என்பது தேர்ப்பாகற்குச் சொல்லியது.

[1]"காதலர் வரவு காட்டினை யாதலிற்
சூழ்கதிர்ச் சுரிமுகப் பணிலம்
வாழிய மலர்தலை யுலகுழை நெடிதே" (162)

என்பது தோழி சங்கினை வாழ்த்தியது.

"புரிகுழன் மடந்தை பொலிவொடு மன்பர்
வரவினுக் கெதிர்ந்தநம் மக......வின்விழ
து............ய பயனே" (163)

என்பது தலைமகட்குத் தோழி சொல்லியது.

[2]"பிரித லாற்றுமோ நின்னே யரிதின்
உடம்பாண் டொழிந்தமை யல்லது
மடங்கெழு நோக்க மரீஇய நெஞ்சே" (164)

என்பது தலைமகட்குத் தலைமகன் சொல்லியது. (உச)

## ச. ஆயிடைப் பிரிவு

உரு. வாயின் மறுத்தலும் வாயில் கூறலும்
தோழி மாற்றலும் புலவி தோற்றலும்
கிழவன் புலத்தலுங் கிழவி புலத்தலும்
விழைகுநன் விழையா னிவனென விளம்பலும்
தாய்கண் டுரைத்தலுந் தாங்கிய காதலின்
ஆயின பிறவு மாயிடைப் பிரிவே,

என்பது ஆயிடைப்பிரிவு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. "புரிவளை", "தேனிறவார்" (இறை. 56, மேற்.)

2. "மாண்வினைக் குடம்பாண் டொழிந்தமை யல்லதை, மடங்கெழு நெஞ்ச நின்னுழை யதுவே" (அகநா. உக: 21 - 3.)

(இ - ள்.) வாயில்மறுத்தல் முதலாகச் செவிலிகூற்றீருகச் சொல்லப்பட்ட இவையும் பிறவும் பரத்தையிற் பிரிவாம் என்றவாறு.

பிறவு மென்றதனுற் பரத்தையர் கூற்றும் பூப்புணர்த்துதலும் உள்ளிட்டனவெல்லாம் கொள்க.

"புலைமக னுதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்
பகலெஞ் சேரிக் காணின்
*அகல்வய லூர னுணவும் பெறுமே" (165)

(தொல். கற்பு. 9, ந; நம்பி. 206, மேற்.)

என்பது பாணனுக்கு வாயில்மறுத்தது.

"........................நல மின்னே
இசைகுவன் மன்னே யானே
அருளுடை மாத ரலையா தீமே" (166)

என்பது வாயில்மறுக்கப்பட்ட பாணன் கூறியது.

"......................திருநுதற் பேதை
ஊரன் செய்த துணையாள் கேண்மை
உள்ளவும் படாஅ ளிவளென
எள்ளின ளம்மதன் னீர்மை யானே" (167)

என்பது விறலி வாயில்மறுத்தது.

"......................................
அங்கட் பொய்கை யூரன் கேண்மை
திங்க ளொருநா ளாகுந் தோழி
......................................." (168)

(சிலப். அ : 39-41, அரும்பத. மேற்.)

என்பது தோழிக்கு வாயில்மறுத்தது.

"வருகுவர் மாதோ காவல ரீங்கெனக்
கவிரிதழ்ச் செவ்வாய் துடிப்ப
அரிமா ணெடுங்கண் சேர்ந்தன என்றே" (169)

என்பது வாயில்மறுத்தமை தோழி தலைமகற்குச் சொல்லியது.

"வருந்துகம் பெரிது நெஞ்சே யாவதும்
விருந்துமுதல் வாயிலும் பெறேஎன்
திருந்திழை யல்கு னீங்கலள் சிவப்பே" (170)

என்பது வாயில்பெறாத தலைமகன் வாடியது.

---

* (பி - ம்.) நல்வரை நாடன்.

"மேனுட் கூறிய மொழியு மிந்நாள்
ஊழிற் பிறந்த தவறு நினைஇ
யான்றுணை யாக வென்னும்
தேன்றோய் கோதையை யறிகுவன் சென்றே" (171)

என்பது தலைமகள் ஆற்றாமை கண்டு ஊடலுணர்த்தச் செல்லும் தோழி சொல்லியது.

"ஐம்படை தாங்கிய செம்பொறி யாகத்துப்
புன்றலைப் புதல்வனொடு புகுதலின்
நன்றோ வன்றோ னறுநுதல் சிவப்பே" (172)

என்பது தோழி..................................

*　　*　　*　　*　　*

# சூத்திர முதற்குறிப்பகராதி

[எண் - பக்க எண்.]


அகத்ததும் புறத்ததும், 1.
அலர்பெரி தென்றலும், 34.
இருணிலையுச்சி, 2.
காதன் மிகவின், 24.
கூதிர்வேனில், 2.
கையடை மகிழ்ச்சி, 42.
தன்னயந்தெளிதலும், 10.
திணையே தருப்பணம், 5.
தெய்வ மானிடஞ், 3.
நிறைத்தேனழித்தலு, 4.
பாங்குணர்வையுற, 15.
பிரிவகையுணர்த்தலும், 47,
புணர்தலும் பிரிதலும், 6.
பொருப்பே வெம்பரல், 2.
மறுதலையில்லா, 36.
மூக்கட் கூட்ட, 36.
முதல்கருவணைந்த, 1.
முந்திய நூலோர், 7.
முருகனுமிரவியு, 3.
முருகியங்குறுஞ்சி, 5.
வருநெறி நினைந்து, 31.
வாயின்மறுத்தலும், 52.
விறுதலும் விடுத்தலும், 12.
வெற்பன் குறவர், 4.
வேங்கைகாந்தள், 6.


# மேற்கோட் செய்யுண் முதற் குறிப்பகராதி

[எண், பக்க எண்.]


..அங்கட் பொய்கை, 53
அடுந்திறல் வேழம், 22
அடும்பின்மென் கொடி, 25
அணிகொணர்ந்தனரே, 35
அதுவுமாகுவது, 38
அம்புமுகங், 17
அம்மவாழி தோழி, 50
அம்மென் சாயல், 27
அயிலேரம்பினர், 45
அருஞ்சுரக்கவலையும், 49
அலவனாட்டலு, 19
அளிதோதானே (குறுந்.), 36
அறனன்றம்ம, 46
அறனுமீகையு, 47
அறியாளன்னே, 38
அறியேன் றோழி, 48
அன்புமன்றே, 39
அன்னாயன்னாய், 29
அன்னா யொருவ, 23
அன்னைக்கிம்மறை, 39
அன்னை வாழி, 26
ஆண்டவனொழிந், 50
ஆய்கதிர்ச்செல்வன், 25
ஆய்தளிர் பொதுளிய, 14
ஆற்றினன் மன்னோ, 10
ஆற்றேன் றோழி, 39
ஆறுசெல்வருத்த, 47
ஆறேயரிய, 32
இதற்கொண்டினி, 34
இல்லமொடு மிடைந்த, 51
இவளே நலமேம்பட்ட, 45
இவளே நின்னல, 42

இளிவரு சிந்தை, 41
இளையளம்ம, 41
இனையல்வாழிபிரி, 10
இனையல்வாழியெம் (சிற்றட்டகம்), 11
உடையை வாழி, 11
உரைமினீர்மன், 17
உரையாயண்ணல், 26
உவந்தனை காண்டி, 42
உளதாலம்ம, 21
ஊர்கபாக தேரே, 52
ஊருஞ்சேரியும், 35
எய்யாவுள்ள, 38
எவன் பலமொழி, 47
எழுதருமதியங் (குறுங்.), 49
எளிதோவம்ம, 22
என்னு முள்ளி (ஐங்.), 45
ஐம்படை தாங்கிய, 54
ஓண்டிறலண்ண, 44
ஒலிவெள்ளருவி (குறுங்.), 28
ஒள்ளிணர்வேங்கை, 27
கடிகமழ்கண்ணி, 19
கண்ணி தகை, 16
கண்ணேகாவியங், 13
கயஞ்சான்மறு, 40
கலந்தாங்கிளமுலை, 41
கவ்வையம்பெரும்பழி, 51
கழிப்பூங்கானல், 33
கழைகெழுசிலம்பில், 33
கள்ளவிழ் கோதை, 29
கனவேயாயினும், 11
காண்குவிராயிற், 13
காணாய் தோழி, 23
காதலர் வரவு, 52
காய்ந்திலை மறவை, 44
காரேசெய்த, 51
காலியனெடுந்தேர், 50
காவிகண், 30
காவியங்கருங்கண், 15
கானஞ்கார்பெய, 35
குறித்ததையிது, 48
கையதுசெயலை, 17
கோங்குதேர் வாழ்க்கை (குறுங்.), 10
கொடுஞ்சிலை வலத், 19
கொடுவரி வயப்புலி, 28
கொள்ளலிரம்ம, 22
சிறுபுன் மாலை, 50
சிறுவெள்ளரவி (குறுங்.), 12
சூன்முதிர் கொண்மூ, 44
சேங்கதிர்ச்செல், 43
செங்களம் (குறுங்.), 24
செல்லாரவரென, 50
செவ்வாயன்ன, 25
சேறலரென்பது, 49
தண்ணென் சாயல், 39
தந்துநீயளித்த, 23
தந்தோன்மேனாள், 23
தழைகெழு, 23
தனிமை நெஞ்சத்து, 14
தானும் யானும், 23
திருந்தா வாழ்க்கை, 21
..திருநுதற்பேதை, 53
தீயினும்வெய்ய, 35
துறந்ததற் கொண்டு (ஐங்), 46
தூய்மைசான்ற, 19
தேய்வமாக, 14
தேரானல்லன், 28
தேரும் பிறவும், 35
தோடிநடந்திழிய, 51
தோழிவாழி மேனாள், 37
நண்ணுதலரிதே, 18
நல்லிசை நிறுத்தல், 49
..நலமின்னே, 53
நறும்பூங்கண்ணி, 24
நறைகமழ், 28
நன்னுதலாயம், 22
நாண்கால் வாங்கிய, 45
நாளு நாளு (சிற்றட்டகம்), 49
நிரைதாரண்ண, 28
நிரையிர்செல்லு, 51
நிலந்தொட்டுப் (குறுங்.), 44
நிலவோரன்ன, 34
நிறைநீர் மாமழை, 51
நீர்வார்கண்ணை (குறுங்.), 49
நுணுகிய நுசுப்பின், 37
நும்மனைச் சிலம்பு (ஐங்.), 46
நெடுந்தேர்க் காளை, 43

நெருநலிவ்வழி, 23
நோக்கினும் பிறர், 16
நோதக வுடைத்தே, 13
பகலேவரினும், 32
பயில்பூஞ் சாரல், 19
பனிநாட்டாமரை, 35
பாங்கினராகித், 26
பிடவுங் கோடலும், 50
பிரித லாற்றுமோ, 52
புதுப் பூங்கோதை, 42
புதுவது புனைந்த, 46
புயற்குழல், 21
புரிகுழன் மடந்தை, 52
புலந்துறை போகிய, 13
புலனன்றென்ப, 11
புலைமகனுதலிற், 53
புள்ளுந் துயில், 29
புனையிழை, 16
பூத்த வேங்கை, 18
பெரும்பட ருழக்கும், 45
பெருமலர்ப் பிரிந்த, 15
பெருவரைமிசை (குறுங்.), 20
பெறுதிற நாடினை, 21
பேதுறல் வாழி, 24
பொருந்தாதம்ம, 12
பொன்னியல், 20
மடவரன் மாதர்க்கு, 45
மணிநீர்ப் பொய்கை, 24
மருந்தெனின் மருந்தே (குறுங்.), [48
மறுவிறுவிச் (ஐங்.), 44
மனவேரல்குன், 11
மாமணிமுழி லண்ணல், 22
மாமலைச்சிலம்ப, 22
மாயிருஞாலத், 48
மாலை மணந்து, 25
மாவெனமடலு (குறுங்.), 22
மானதர் மயங்கிய, 46
மீளாவென்றி, 49
முதுக்குறைந்தனளே, 41
முதுவாய் வேல, 46
முருகற் செவ்வி, 32
முளையெயிறு, 40
முன்னினை முடிப்ப, 12
மெல்ல மெல்ல நின், 42
மேஞுட் கூறிய, 54
யாண்டுளன்கொல், 37
யாயு ஞாயும் (குறுங்.), 10
யாயே, 32
யானெவனறிகோ, 35
யானொன்று கூறுவ, 47
வண்டார் கோதை, 43
வணர்சுரியைம்பால், 30
வம்பவரவினிராக, 20
வரம்பில் கேள்வி, 48
வரிசிலையிடவயி, 45
வரிவளைத் தோளி, 27
வரிவளைப் பணைத்தோள், 30
வருகுவர் மாதோ, 53
வருந்தினை வாழி, 41
வருந்துகம் பெரிது, 53
வரைதல் வேட்டனி, 33
வலியை மன்ற, 43
வளங்கெழு கானம், 46
வாங்கிருஞ்சிலம்பின், 18
வாராதீமோ (சிற்றட்டகம்), 32
வாரராரயினர், 52
வாழ்வதியாவது, 13
வான்றோய்தொல்குடி, 41
வில்லோன் காலன (குறுங்.), 43
வீயாமரபின், 38
வெய்யோன் சாபத், 44
வெல்பெருந்தானை, 58
வேங்கை யொள்வீ, 13
வேய்பயிலிறும்பி, 28
வேரல் வேலி (குறுங்.), 27
வைகல் வைகலைய, 17

# பிழையும் திருத்தமும்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 3, 25 | தெளிதல் | தெளித்தல் |
| 15 | 7 | பிறந்த | பிரிந்த |
| ,, | 14 | ஆங்கவன் | ஆங்கவள் |
| ,, | 16 | மறையே னென்றலும் | மறையேயென்றலும் |
| ,, | 18 | அறியா ளென்றலும் | அரியளென்றலும் |
| 36 | 26 | நோதலும் | நேர்தலும் |
| ,, | 29 | தெளிதலும் | தெளித்தலும் |
| ,, | 30 | தம்வயின் | தமர்வயின் |
| ,, | 31 | இளையோர்க் | இளையோற் |
| 38 | 16 | மில்லுழி | மிவ்வுழி |
| 42 | 9 | பெயர்த்த | பெயர்த |
| ,, | 11 | பெயர்ந்தனன் | பெயர்ந்தனர் |
| ,, | 12, 15 | தலைமகள் | தலைமகன் |
| 43 | 31 | வரிவளைக் | வரிவளை |
| 45 | 13 | வளையாக்காலே | வளையுங்காலே |
| 47 | 10 | நோதலுஞ் | நேர்தலுஞ் |

49. . இப்பக்கத்தில் 'என்பது பகை தணிப்பான் பிரிவெரன உணர்த்தியது' என்பதன்பின் கீழ்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்க:

"வெல்பெருந் தானை வேந்தன் பகைமிசைச்
செல்குவர் மாதோ காதலர்
அல்லியங் கோதை அழுங்கலோ வொழியே"

என்பது வேந்தற் குற்றுழிப் பிரிவெரன உணர்த்தியது.

| | | | |
|---|---|---|---|
| 55 | 9 | தெளிதலும் | தெளித்தலும் |